# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| | | |
|---|---|---|
| மாலை 1 | ஞாயிறு 5-2-39 வெகுதான்யஹூ தைமீ 23உ | முத்து 19 |


## பொருள் அடக்கம்


விஷயம் — பக்கம்

1. ராஷ்டிரபதி தேர்தல் ... 498
2. புது வரிகள் ... 500
3. போகிற போக்கில் ... 502
4. வார நடப்பு ... 504
5. கடற்கரைப் பெண் (கு. ப. ரா.) ... 505
6. திண்ணையில் (ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்) ... 506
7. மறு மலர்ச்சி (ஸ்ரீ. ஸு. சேதுராமன்) ... 509
8. கடிதம் ... 512
9. டேலிபோன் செய்தி (ஸ்ரீ. வி. ஆர். சுந்தரராமன், எம். ஏ.) ... 513
10. வெறுப்பும் விருப்பும் (ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார்) ... 517
11. சிறு குடிசை (ஸ்ரீ. எஸ். பிச்சையா) ... 521
12. புத்தக விமர்சனம் ... 523
13. சிறுவர் பகுதி ... 524
14. வலை வீச்சு ... 525


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# ராஷ்டிரபதி தேர்தல்

ஞாயிறன்று நடந்த ராஷ்டிரபதி தேர்தலில் ஸ்ரீசுபாஷ் சந்திர போஸ் வெற்றி பெற்றுவிட்டதற்குக் காரணங்கள் பலவிதமாகச் சொல்லப்படுகின்றன. வலது சிறகார்கள் (Right wingers) பதவி மயக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்துவிட்டு கடைசி நிமிஷத்தில் ரஸாபாஸமாக அறிக்கைகள் விட்டதால்தான் காரியம் கெட்டுப்போய் விட்டது என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம். சுபாஷ் பாபு ஆறுமாத காலமாக தனக்காக ரகசியமாகப் பிரசாரம் நடத்திக்கொண்டிருந்ததாக ஒரு செய்தி; சமஷ்டி எதிர்ப்பு விஷயமாக காரியக் கமிட்டியின் தலைவர்கள் மழுப்பிப்பேசினதால்தான் டாக்டர் பட்டாபி தோல்வி அடைந்தார் என்கிறார்கள் சிலர். சென்னை மந்திரி சபையால்தான் காரியம் கெட்டுப் போய்விட்டது என்கிறது ஒரு சகோதரப் பத்திரிகை. காரியக்கமிட்டி அங்கத்தினர்களின் யதேச்சாதிகாரம்தான் என்கிறார்கள் பலர். தேர்தலில் ஒரே ஒரு உணர்ச்சிதான் மேலெழுந்து நின்று போஸுக்கு வெற்றி கொடுத்திருக்கிறது போல் நமக்குத் தோன்றுகிறது. வலது சிறகார்கள் இடது சிறகார்கள் என்ற பேதமேயின்றி, வங்காளம் பூராவும் மாகாண உணர்ச்சியில் சுபாஷுக்கு ஓட்டு அளித்திருப்பதுதான் அவர் வெற்றிக்கு ஒரு முக்கியமான காரணம். ஒரு சகோதரப் பத்திரிகை கூறுவதுபோல் இருவருடைய சொந்த மாகாணங்களையும் விலக்கிவிட்டுப் பார்த்தால் பட்டாபிக்கே பெருவாரியான ஓட்டுகள் இருக்கின்றன. மாகாணவாரியாகப் பார்த்தாலும் பட்டாபிக்குப் பெருவாரியான ஆதரவு இருக்கிறது.

காரணம் எதுவானாலும் ஸ்ரீ போஸின் தேர்தலிலிருந்து பல விஷயங்கள் வெளியாகின்றன. அதிகாரம் செல்வாக்கு இவற்றால் ஏற்பட்ட மமதையால் வலது சிறகுத்தலைவர்கள் ஜனப்பிரதிநிதிகளை ஓரளவு லட்சியம் செய்யாமல் இருந்ததை மனதில் வைத்துக்கொண்டே பலர் காரியக் கமிட்டியின் சிபார்சுக்கு விரோதமாக ஓட்டு செய்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. வலது சிறகார்கள் இப்படி ஆலஸ்யமாக இருந்தபொழுது இடது சிறகார்கள் எனப்படும் தீவிரவாதிகள் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற வாக்கியத்தை அனுசரித்து, காங்கிரஸ் சர்க்கார்களின் கீழ் ஏற்பட்ட சலுகைகளை உபயோகப் படுத்திக்கொண்டு தொழிலாளிகளைப் பெருவாரியாகத் தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு காங்கிரஸிற்குள் அதிக பலம் பெற்றுவிட்டார்கள். இது ஒரு சில மாதங்களுக்குள் நடந்த சமாசாரம்; சமீப காலத்து மாகாணத் தேர்தல்களில் துலங்கிய விஷயம். தீவிரவாதிகளின் முயற்சியையும் சாமர்த்தியத்தையும் நாம் போற்றத்தான் வேண்டும்.

வர்தாவின் வீழ்ச்சிக்கு இந்தத் தேர்தல் ஒரு அறிகுறி என்று ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை கூறுகிறது. அதை நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. ஏனென்றால் இந்தத் தேர்தல் ஒரு சின்ன விஷயம். சென்ற வருஷம் பூராவும் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் ராஷ்டிரபதியாயிருந்ததால் ஒருவிதமான புரட்சியும் ஏற்பட்டு விடவில்லை; வருகிற வருஷத்திலும் காந்திஜி தலையிடாமல் ஒன்றும் நடக்கப்போவதில்லை. அவருடைய இணையற்ற தலைமை நமக்கு இருக்கும்வரை வேறு யாருடைய வாக்கு செல்லும்? யார் ராஷ்டிரபதியானால் என்ன?

திரிபுரிக் காங்கிரஸ் பிரதிநிதிகள் செய்த காரியம் சரியா என்பது போகப் போகத்தான் தெரியவேண்டும். ஆனால் அவர்கள் காந்திஜியின் தலைமையை நிரா

கரிப்பதற்கு அடையாளமாக இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நாம் நம்பவில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு விபரீதமான நிலைமை ஏற்படுவதற்கு ஸ்ரீ போஸோ அல்லது தீவிரவாதிகளோ அவ்வளவு பெரிதாக ஒன்றும் சாதித்து மக்களின் மனதைக் கவர்ந்து விடவில்லை.

சுபாஷின் தேர்தல் காந்தீயத்தின் வீழ்ச்சி அல்ல என்பதுதான் நமது நம்பிக்கை; ஒரு வேளை வரும் காலத்து சம்பவங்கள் அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தினால் இந்திய சுதந்திர இயக்கம் நின்ற நிலைக்கு வந்துவிட்டதென்று நிச்சயம் சொல்லிவிடலாம்; நாட்டில் பிளவு நிச்சயம் என்று சொல்லிவிடலாம். ஆனால் அப்படி ஒன்றும் நடந்து விடாதென்பது நிச்சயம். காந்திஜியைப் பொது மக்கள் நிராகரிக்கமாட்டார்கள்.

தேர்தலுக்குப் பிறகு ராஷ்டிரபதி விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தேர்தலால் காங்கிரஸில் பிளவு ஏற்படாது என்றும் அமைப்பிலும் ஒருவிதமான மாறுதலும் ஏற்படாதென்றும் சொல்லியிருக்கிறார். சர்தார் முதலிய தலைவர்கள் புதுக் காரியக்கமிட்டியில் சேருவார்களா என்று தெரியவில்லை. நாட்டின் நன்மையை உத்தேசித்து அவர்கள் தோல்வியைப் பொருட்படுத்தாமல் சேவை செய்ய முன் வருவார்கள் என்றே நம்புகிறோம்.

இது எழுதியான பிறகு காந்திஜியின் அறிக்கையும் வெளிவந்துவிட்டது. அதன் ஒவ்வொரு வரியிலும் மனோவேதனை ததும்பி நிற்கிறது. உண்மையின் ஆக்கிரகத்துடன் தான் தான் பட்டாபியை நிறுத்தினதாகவும் பட்டாபியின் தோல்வி தன் தோல்வியென்றும் கூறுகிறார்.

நாம் மேலே சொன்னபடி இந்தத் தேர்தல் தீவிர வாதிகளின் வெற்றியென்று கூறிவிட முடியாது. காந்திஜியே அப்படிக் கருதுகிறார் என்றாலும் புள்ளி விவரங்கள் அவ்விதமான அபிப்பிராயத்திற்கு ஆதரவாக இல்லை. என்றாலும், காந்திஜி அறிக்கையில் தோல்வியடைந்தவர்கள் காங்கிரஸிற்குள்ளேயிருந்து வேலை செய்ய முடியாது என்று கருதினால் வெளிவருவது தான் சரி என்கிறார். போஸ் மறுபடியும் தலைவர் ஆவதைத் தான் விரும்பவில்லை என்று கூறுகிறார் காந்திஜி. நாட்டில் பலர் அதே அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

காந்திஜி தோல்வி அடையவில்லை. அவர் சொல்லுவது போல அவர் தோல்வி அடைந்தார் என்றால் நாட்டிற்கு விமோசனம் இல்லை. மேலும் அ. இ. கா. க. தேர்தல் விபரங்களிலிருந்து காந்தீயத்தில் பற்றுள்ளவர்கள் தான் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

எப்படியானாலும் காந்திஜியின் அறிக்கை மூலமாய் நாட்டில் ஒரு பெருத்த நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. ராஷ்டிரபதியின் மழுப்பல் இனிமேல் உபயோகமில்லை. அவர் கூறிய ‘திட்டமும் கொள்கையும்’ என்ன என்பது இன்னும் அவருக்கே தெரியாது! இந்த நிலைமையில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் என்ன செய்யப்போகிறார்? அவர் செய்யப்போவதைப் பொருத்திருக்கிறது இனிமேல் நாட்டில் நடக்கப்போகிற அமளி. இந்த நெருக்கடியைப் பெருந்தன்மையுடனும் முன் யோசனையுடனும் சமாளிக்க அவருக்குச் சக்தியுண்டா? தைரியமுண்டா?

---

குறிப்பு

# புது வரிகள்

சென்னை சர்க்கார் 'பட்ஜட்' பிரசவ வேதனையிலிருக்கிறார்கள். மதுவிலக்கால் ஏற்படும் பெருத்த துண்டை சரிகட்டுவதற்காக வரவு இனங்களை அதிகரிக்க வேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது. மிகுந்த நிதி நிபுணத்துவத்துடன் சர்க்கார் பல செலவுகளை சிக்கனப்படுத்தி யிருக்கிறார்கள்; யதேச்சையாகச் சில 'மானியங்'களையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் வரவு செலவைச் சரிகட்ட அதுவும் போதாமல் புதிய வரிகள் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அதுவும் இந்த வருஷம் நில வரியைப் பல ஜில்லாக்களில் வஜாச் செய்யவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. வட ஆற்காட்டில் வருகிற அக்டோபர் முதல் மதுவிலக்கை ஆரம்பிக்க போவதாகவும் தெரிகிறது. இந்த நிலைமையில் சர்க்காரின் சங்கடத்தைத் தீர்க்கப் புது வரிகள்தான் வழி.

ஏற்கனவே மின்சார வரி யொன்று போட மசோதா வந்துவிட்டது. அதன்படி, யூனிட் ஒன்றிற்கு இரண்டணாவிற்கு மேற்பட்ட கட்டணம் வசூலிக்கும் மின்சாரக் கம்பெனிகளுக்கு வரி ஏற்படுகிறது. மின்சாரத்தை உபயோகிப்பவர்களுக்கு அதனால்ஒருவித பாதகமும் இல்லை. பெட்ரோல் வரி விஷயமாக சமஷ்டி கோர்ட் மாகாணங்களுக்கு சௌகரியமாகத் தீர்ப்பு அளித்துவிட்டதால் இனிமேல் மாகாணங்கள் விற்பனை வரிகள் போடுவதற்கும் இடமிருக்கிறது.

வரி விதிப்பு விஷயத்தில், தற்கால நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்வதுடன் கூட, நாளா வட்டத்தில் மாகாணத்தின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யும் முறையிலேயே போவது நல்லது. பொது மக்கள் பெருவாரியாக உபயோகிக்கும் அவசியமான பொருள்களின் விலை ஏறாத வகையில்தான் வரிகள் விதிக்கவேண்டும். அவசியமாகத் தேவையில்லாத விலையுயர்ந்த சாமான்களின் மீதுதான் வரிகள் போடவேண்டும். சென்னை சர்க்கார் தமது வரவு செலவு திட்டத்தை சென்ற வருஷம் யாரோ சொன்னதுபோல கிராமவாசியின் திட்டமாகச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

## பிரகாசம் கமிட்டி அறிக்கை

சென்னை சட்டசபை பிரகாசம் கமிட்டி அறிக்கையை ஆமோதித்து அதன்படி கூடிய சீக்கிரம் சட்டமியற்ற வேண்டுமென்று தீர்மானித்துவிட்டது.

அறிக்கையை சமர்ப்பிக்கும்போது மந்திரி பிரகாசம் செய்தபிரசங்கமும், 28 மணி நேரம் நடந்த விவாதமும், பிரதம மந்திரியின் ஆணித்தரமான எச்சரிக்கையும், பிரகாசத்தின் முடிவுரையும் இதுவரை சென்னை சபை கண்டிராத சம்பவங்கள்.

இந்த அறிக்கையின் மூலம் சில மூலாதாரமான நிலப் பிரச்னைகள் தீர்மானமாகும் என்பதில்சந்தேகமில்லை. ஆனால் அவை ஜமீன்தாரி நிலங்களுக்குமட்டுமின்றி அயன் நிலங்களுக்கும் பொருந்தும்படியாக அமையவேண்டும் என்பதுதான் நமது கோரிக்கை. அதற்கு அயன் பிரதேசத்திலும் ஒரு ஆராய்ச்சி நடப்பது மிகவும் நல்லது. மாகாணம் முழுவதற்கும் பொருத்தமாக நில நிர்ணயம் செய்தால்தான் சட்டம் சரிவர இயற்றலாம்.

## அசட்டுப் பேச்சு

விவாதத்தின் நடுவே நிலத்தில் ஒருவிதமான உரிமையும் இல்லாத ஸ்ரீ லாங்கிலி புகுந்து சட்டசபை கண்ணியத்திற்கே ஏற்காதவாறு ஏதேதோ பேசினார். அறிக்கையை ஸ்ரீ விசுவநாதன்தான் எழுதினார் என்றார். யார் எழுதினால் என்ன? மந்திரி பிரகாசம் அதிலிருக்கும் அபிப்பிராயங்களுக்குப் பூரா பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டால் அதை அவர்தான் எழுதவேண்டுமென்று உண்டா? கலக்டர்கள் எல்லாம் தங்கள் ரிபோர்ட்டுகளை அவர்கள் கைப்படத்தான் எழுதுகிறார்களா?

அறிக்கையைப் பற்றியும் சாட்சியங்களைப் பற்றியும் அவர் சொன்ன கண்ணியமற்ற சொற்களுக்கு மந்திரி பிரகாசம் தன் முடிவுரையில் சவுக்கடிகள் போல பதில் அளித்தார். தெய்வமே என்றும் தூங்கும் சிங்கத்தின் வாலை மிதித்தால் அது சும்மா இருக்குமோ? அப்பொழுது ஸ்ரீ லாங்கிலியின் முகத்தைப் பார்க்கவேண்டுமே!

இன்னும் ஸ்ரீ லாங்கிலி பழைய காலத்து ஞாபகத்தில் பேசினால் இந்தமாதிரி அடிபடவேண்டியதுதான். 'அடிகொடுப்பேன், அடியும் வாங்கிக்கொள்வேன்' என்றாராம் ஒரு பேட்டியில். இந்த சந்தர்ப்பத்தில் அடிக்கப் போனார்; கொடுக்கவில்லை. பலமாக வாங்கிக் கொண்டார்.

## பஞ்ச நிவாரணம்

திருச்செங்கோடு ஆசிரமம் மானேஜர் அனுப்பியுள்ள கடிதத்தை மற்றெரு பக்கம் பிரசுரித்திருக்கிறேம்.

தற்சமயம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைக் கொஞ்சமாவது நிவர்த்தி செய்வதற்குத் தமிழ் நாட்டில் கதர் விற்பனை அதிகம் ஆகவேண்டுமென்பது மிகவும் அவசியம். இது விஷயமாக ஸ்ரீ. கே. சந்தானம் கூட சில தினங்களுக்குமுன் ஒரு அறிக்கை விடுத்திருந்தார்.

சில மாதங்களாகவே கதர் விற்பனை அவ்வளவு சரியாக இல்லை. தமிழ் நாட்டு மக்கள் நிலைமையின் நெருக்கடியை உணர்ந்து கதருக்கு பெருமிதமான ஆதரிப்பு அளிப்பார்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேம்.

## வேண்டாத மனைவி

'வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? அந்தப் பழமொழியை எடுத்தாள வேண்டிய சந்தர்ப்பம் வாழ்வில் அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆனல் இப்போது 'வேண்டாப் பெண்டாட்டி சும்மா இருந்தால்கூட குற்றம்' என்று திருத்தி உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஜவாப்தாரி சென்னையிலுள்ள ஓர் சகோதரப் பத்திரிகை.

இந்தப் பத்திரிகை காங்கிரஸ் மந்திரி சபையுடன் உரிமை கொண்டாடிக் கொண்டு தினமும் குற்றம் கண்டுபிடிக்க முற்பட்டிருக்கிறது. மந்திரி சபையின்மீது யார் வேண்டுமென்ருலும் குற்றம் சொல்லலாம்; அதில் தவறு கிடையாது; அதனல் அபாயமும் இல்லை. மரம், மட்டை இவைகளைக் கோபித்துக் கொண்டால்கூட ஏதாவது நமக்குக் கெடுதல் உண்டாகும்; காங்கிரஸ் மந்திரி சபையைக் கோபித்துக்கொண்டால் ஒருவிதக் கெடுதலும் உண்டாகாது! இதை வியாஜமாக வைத்துக்கொண்டு காங்கிரஸ்மீது விஷத்தைக் கக்கும் பத்திரிகைகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனல் உரிமை கொண்டாடிக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம் பொறுப்புடன் எழுதுவார்கள் என்று எதிர்பார்த்தோம். காங்கிரஸ் மந்திரிசபை எதைச் செய்தாலும் குற்றமாக அவர்களுக்குத் தோன்றிற்றென்ருல் நமக்கு வருத்தம் உண்டாகிறது.

ஆனல் ஊரில் யாரோ எங்கேயோ தவறு செய்தால் அதற்குக்கூட மந்திரி சபையைக் கோபித்தால் அந்தப் பத்திரிகையைப் பற்றி நாம் என்ன எண்ணுவது? ஸ்ரீ பட்டாபி காங்கிரஸ் தலைவர் தேர்தலில் தோற்றுப்போனதைப் பற்றி அப்பத்திரிகை எழுதிக்கொண்டே வரும்போது 'அடாடா! இன்றைக்கு மந்திரிசபையைக் குற்றம்சொல்ல முடியவில்லையே. என்ன செய்யலாம்?' என்று யோசித்து பட்டாபியின் தோல்விக்கும் மந்திரிசபைக்கும் ஒரு முடிச்சுப் போட்டது. காங்கிரஸ் மந்திரிசபை காங்கிரஸ்காரர்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் புழங்கவில்லையாம். அதனல் அவர்கள் மந்திரி சபையின் பேரில் தங்கள் வெறுப்பைத் தெரிவித்துக் கொள்ள தென்னிந்தியரான பட்டாபிக்கு வோட் போடாமல் சுபாஷுக்கு போட்டார்களாம். ஆகவே பட்டாபியின் தோல்விக்குக் காரணம் மந்திரி சபை!


இந்தமாதிரி சம்பந்தமில்லாமல் ஒரு மனிதரையோ அல்லது ஒரு அரசாங்கத்தையோ குற்றம் சொல்வது மிகவும் சந்தோஷமான காரியமாகத்தோன்றலாம், சுலபமாக இருக்கலாம், அதனல் கொஞ்சம் பிரபலமாகக்கூட ஆகலாம். ஆனல் இப்படிச் செய்வது நியாயமல்ல.

## மாணவர் வேலை நிறுத்தம்

கலாசாலை மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதைப்பற்றி பல தலைவர்கள் கண்டித்துவிட்டார்கள். மாணவர்கள் கல்வி கற்றுக்கொள்ளத்தான் முக்கியமாக கலாசாலைகளில் சேர்ந்திருக்கிருர்கள். ஆகவே ராஜீய விஷயங்களை யெல்லாம் முன்னுக்குக் கொண்டுவரக் கூடாது என்று சுட்டிக் காட்டுகிருர்கள். அப்படி ராஜீயத்தில் சம்பந்தப்பட்டு வேலை நிறுத்தம் உண்டாவதனல் மாணவர்களுக்குத்தான் நஷ்டம். அவர்களுக்குப் பணச் செலவு மட்டுமல்ல; படிப்பும் குட்டிச்சுவராய்ப் போய் விடும் என்று எடுத்துக் கூறியிருக்கிருர்கள்.

ஆனல், இவ்வாறு மாணவர்கள் படிப்புப் போனலும் போகட்டும் என்று கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளும் காரணத்தை அலசிப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது மாணவர்கள் தற்போதுள்ள சமூக நிலைமையில் கொண்டிருக்கும் ஒரு வெறுப்பும் நம்பிக்கைக் குறைவும் தெரியவருகின்றன.

இம் முத்தில் மற்றேரிடத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் ஸர். எம். வேங்கட சுப்பாராவின் வார்த்தைகளைப் படிக்கும்போது இந்த உண்மை ஊர்ஜிதமாகிறது. மாணவர்கள் மட்டுமல்ல பட்டதாரிகளும் இப்படி அரசியல் புரட்சிகளில் கலந்துகொள்வதற்குக் காரணம் தற்போது சமூக அமைப்பில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கைத்தான். அவர்களுக்கு வாழ உரிமை அளிக்காத ஓர் சமூகத்தை அவர் வெறுப்பதில் ஆச்சரியமில்லை.




சென்ற இரண்டு வாரமாக மிகவும் மும்மரமாக கிராம முன்னேற்றத்தைப் பற்றி சட்ட திட்டம் போட்டு, சாரமில்லாமல் போனாலும் காரமாய் எழுதிக் கொண்டு வந்தேன். அதை அப்படியே தொடர்ந்து 'போகிற போக்கில்' எழுதுவதற்கு இப்பொழுது எதிர்பாராத ஒரு ஆபத்து வந்து விட்டது.

இந்த வாரம் எனக்கு நேர்ந்திருக்கும் சுற்றுப் பிரயாணத்தில் என் பழைய நண்பர் ஒருவரை சாயங்காலத்தில் சாந்தமான நேரத்தில் சந்தித்தேன். அவர் எனக்கு ஓர் முக்கிய நண்பர். இருபத்தைந்து வருஷகால அன்பார்ந்த சிநேகிதத்தை நாங்கள் பாராட்டி வளர்த்து வருகிறோம். இதுவரையில் அதற்கு இடையூறுகள் ஒன்றும் நேரிடவில்லை. ஏனென்றால் நாங்கள் இருவரும் தொழிலில் அதிகப் பணம் சம்பாதிக்கவில்லை, மிச்சம் சேர்க்கவுமில்லை. 'பாங்க் பாலன்ஸ்' சமம் 0. சிநேகிதம் உத்தமம். அவரிடம் ஒருமணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என் மனோ திடத்தைத் தளர்த்தி விட்டார்.

என் நண்பர் ஓர் இனிய கவி. பெரிய ரஸிகர். கவிதையிலுள்ள,—ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம், சங்கீதம்,—நய சுகங்களை எல்லாம் நன்கறிந்து அனுபவித்துக் களித்தவர். ஸ்வானுபவத்தையும் வெளியிட்டவர். பெரிய வம்சஸ்தர், வினயஸ்தர். யதார்த்த வசனி. உள்ளுக்கும் வெளிக்கும் புரட்டில்லை. ஆகையால் தான் அவர் முன்னேற்ற மடையவில்லை. அத்வைதம் குடி கொண்டவர். இவ்வுலகெல்லாம் மாயை. இப்படிப்பட்ட உத்தம நண்பரின் வார்த்தையை நான் எப்படி தட்டுகிறது?

“ஏன், ரமணி, இந்தப் பாடு வீண்பாடு. இளைத்துப் போய் விட்டாயே. ஊர் ஊராய் நீ அலைந்து திரிந்து, கிராம முன்னேற்றமாவது இந்த நாளில். நகரச் சாக்கடைக்குத்தான் யோகம், முன்னேற்றம்: பார், மழமழப்பான இரும்புக் குழாயும், சிமிட்டிக் குழாயும் உயர்தர “பம்பிங்ஸ்டேஷனு”ம்!—அவற்றிற்குத்தான் யோகம்.

இந்த அலைச்சலுக்குப் பதிலாய் நீ ஒரு பசுமாடு வாங்கி பசுவையும் கன்றையும் மேய்த்து உன் ஊரில் பாடு பட்டாலே எவ்வளவோ லாபம். முதல் பக்ஷம் நல்ல சாப்பாடு. கிராம முன்னேற்றமாவது, மண்ணாங்கட்டியாவது! சர்க்கார் அல்லவோ பாடுபட வேண்டும். நமது காங்கிரஸ் மந்திரிசபை என்ன சட்ட திட்டங்கள் போடுகிறார்கள்! “அவசரக் கோலம் அள்ளித் தெளிச்சாளாம்” என்றபடி மனசுக்குத் தோன்றியதைத் தீர்மானம், ஆலோசனை யில்லாமல் அவசரப்பட்டு கண்ணாடி போட்டும் கண்ணை மூடிக்கொண்டு எல்லாம் செய்து வருகிறார்கள். முன் செய்வதைப் பின் செய்கிறார்கள். பின் செய்ய வேண்டியதை முன் செய்கிறார்கள். தயிர் முன்னால், பாயஸம் பின்னால், பிரயோசனமில்லை. ஜீரணமாகாது. நிச்சயம்.”

“சோமு, பிறர் என்ன செய்தாலும் போஷிக்கும் தன்மை நமக்கு இல்லை என்றும் குற்றம் குறை சொல்லும் பழக்கம் தான் மிச்சம் என்றும் நீயே, பல தடவை எனக்கு சொல்லி யிருக்கிறாயே! இந்த முறையில் நீயும் சேர்ந்து விட்டாயா? காங்கிரஸ் மந்திரிசபை செய்த திட்டங்களில் உள்ள குற்றங்களை எடுத்துக் காட்டு பார்ப்போம்.” என்று நான் என் நண்பரைக் கேட்டேன். மந்திரி சபையிலும் எனக்கு நண்பர்கள் உண்டே, அவர்களை இந்த சமயம் கைவிட்டு விடலாமா?

“சரி. நாம் ஆராய்ச்சி செய்வோம். நான் பேபர் தலைமுதல் கால்வரையில் படிக்

காதவன். எனக்கு அரசியல் வழக்கும் தந்திரமும் தெரியாது. நமக்குள்ள சாமான்யப் பகுத்தறிவை உபயோகப் படுத்துவோம். மதுவிலக்கு, சேலம் ஜில்லாவில் வெற்றிக்கொடி பறக்கும் மதுவிலக்கு வெற்றியையே கவனிப்போம். இதுவரையில் கள்ளுக்காசு நமது ஊரிலேயேயாவது புரண்டு கொண்டிருந்தது. நமது பிரதம மந்திரி ராஜாஜி செய்த தேயிலை விளம்பரப் பிரசாரத்தால் இப்பொழுது அந்தப் பணமெல்லாம் தேயிலைக் கம்பெனிக்குப் போய் டிக்கட்டு வாங்கிக்கொண்டு சீமைக்குச்சென்று வெள்ளைக்காரன் பொக்கிஷத்தில் அகப்பட்டுவிட்டது. தேயிலைக் கடையில் ராஜாஜி நின்று 'டீ'குடிக்கும் படக் காட்சியை நீ பத்திரிகையில் கொஞ்ச காலம் முன்பு பார்க்க வில்லையா? அதைப் பார்க்க எனக்கு தூக்கி வாரிப்போட்டது. இவர் பிரதம மந்திரியா 'டீ' பிரசார விளம்பர மந்திரியா என்று திடுக்கிட்டேன். மந்திரியின் கடமை என்ன? கள்ளுக் கடைக்குள் புகும் ஒரு அணுவைக் காப்பாற்றி அதை ஏழைகளின் செல்வப் பெருக்கை தேடவேண்டியவழியில் சட்ட திட்டம் போட்டு வழிப்படுத்த வேண்டிய கடமையல்லவா? ஒரு பக்கத்தில் 2000 ரூபாய் சம்பளம் போட்டு சேலத்தில் 'டெவலப்மெண்ட் ஆபீஸர்' நியமித்து, மற்றொரு பக்கத்தில் தேயிலைக் கடையில் நின்று 'டீ' விளம்பரம் செய்யலாமா? இதெல்லாம் அரசியல் மார்க்கத்தில் தெரியாத்தனம் தான்! தீர்மானமான ஆலோசனை யில்லாததுதான் காரணம். கள் வேண்டுமென்று சொல்பவர் இந்த நாட்டில் இல்லை. ஆனால் பாணையிலிருந்து அடுப்புத் தீயில் விழலாமா?

"சட்ட திட்டங்கள் அவசரக் கோலம் அரசியல் மலைச்சரிவில் தப்பாக ஒரு அடி வைத்தால் அதோகதி என்று நான் சொல்லவேண்டுமா? சந்தேகமிருந்தால் சேம்பர்லின் பட்டுக்குடையை கேள். பொருக்கி எடுக்க ஒரு எலும்பு கூட அகப்படாது. எப்படி ஏற்றம் இறைத்தால் மாத்திரம் போதாதோ இறைத்த நீரை வாய்க்கால்கள் போட்டு வயலுக்கு அழைத்துப் போகவேண்டுமோ அப்படியே அரசியலிலும் கண்களை மூடிக்கொண்டு பக்திப் பாட்டுப்பாடிக்கொண்டு உழைத்தால் போதாது. சட்ட திட்டங்கள்,வாய்க்கால் மஞ்சிபோல, ஜனங்களின் நல்லபழக்க வழக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் அனுசரணையான சீர்திருத்தங்களாய் இருக்கவேண்டும். கள்ளிலிருந்து டீக்குப் போவதில் லாபமென்ன, சொல்லு? மீதியான ஒரு அணுவுக்கு நல்வழி கட்டாயப்படுத்திக் காட்ட வேண்டிய கடமை காங்கிரஸ் மந்திரி சபைக்குத் தானே?"

என் நண்பரின் அரசியல் தேர்ச்சியை ஆனந்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். இது எனக்கு ஓர் புதுக் காட்சி. அவருக்கும் புதுக் கிளர்ச்சி. நமது சமஸ்தானங்களில் உண்டானது போல்!

"ஏது சோமு, உனக்கு அரசியலிலும் கூட இவ்வளவு தேர்ச்சி ஏற்பட்டுவிட்டது. எல்லாம், நடராஜா அனுக்கிரகம் போல் தோன்றுகிறது. நீ வக்கீலாக இருக்கும் போது நமது வைஸ்ராய் பெயர் கூட உனக்குத் தெரியாதே! இப்பொழுது ஜமாய்க்கிறாயே! உண்மையில் உன் கையில் ராஜாஜி தோற்றுப் போய் விட்டார். உன்னை டெவலப்மெண்ட் ஆபீசராக போட்டுவிடலாம் போலிருக்கிறது. எங்கிருந்து இவ்வளவு விஷயங்களை, அரசியலில், தெரிந்து எடுத்து கொண்டிருக்கிறாய்?"

"எங்கிருந்து? எல்லாம் உன்னுடைய 'பாரதமணி' வாசிப்பதால்தான்! ஆனால் அதில் நீ எழுதுவதையும் நான் எழுதுவதையும் தவிர வேறு ஒன்றையும் பார்க்கிறதில்லை. அதுவும் இந்த இரண்டு வாரமாய் உன் 'போகிற போக்கில்' வாசிக்கிறதில்லை. 'போகிற போக்கில்' இறக்கும் உயிர்போல் ரொம்பவும் கனத்துப்போய்க் கொண்டிருக்கிறது. இதுவரையில் பெரிய கவிகள் போல் ஆனந்தமாய் எழுதிக்கொண்டு வந்திருந்தாய். ஆனால் இப்பொழுது 2 வாரமாய் நீயும் மந்திரிகள் போல் கிராம முன்னேற்றத்திற்குச் சட்ட திட்டம்போட ஆரம்பித்துவிட்டாய். 'போகிற போக்கிலு'க்கு அனர்த்தகாலம் ஆரம்பித்து விட்டதென்று நினைத்துக் கொண்டேன். நல்லவேளை நீ நேராக வந்துவிட்டாய். ஒரு அணு எனக்கு மிச்சம்." என்று கொட்டாவி விட்டுக்கொண்டு கொஞ்சம் சங்கீதம் பாடிக்கொண்டு சோமு முடித்தார்.

(504-ம் பக்கம் பார்க்க)

# வார நடப்பு

சென்ற வாரம் ஸ்பெயின் கலகக்காரர்கள் பார்஺லோனவைப் பிடித்துவிட்டார்கள். இன்னும் சில முக்கியமான நகரங்களும் இப்போது அவர்கள் வசமாகி வருகின்றன. சர்க்கார் துருப்புக்கள் பத்திரமாக வேறு மூனைக்குச் சென்றுவிட்டார்கள். பார்஺லோனவுக்கு வடக்கே கொடிய போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஸ்பானிஷ் ஜனங்கள் யுத்த பயங்காத்திலிருந்து தப்பிக் கொள்ள பிரான்ஸுக்குப் போகிறார்கள்.

ஆனல், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் லண்டனின் மியூனிச் பல்லவியை மட்டும் விடமாட்டேனென்கிறார். உலகத்தில் சமாதானம் உண்டானதற்குக் காரணம் முஸோலினியின் உதவிதான் என்பது அவர் எண்ணம். இதாலியுடன் எப்போதும் கட்டிக்கொண்டு அழவேண்டுமென்பது அவர் ஆசை. எல்லா தேசங்களோடும் சமாதானமாக வாழவேண்டுமென்பது அவர் லக்ஷ்யம். இந்த உணர்ச்சிகளை யெல்லாம் சேம்பர்லேன் வெளியிட்டுவிட்டு கடைசியில் கொஞ்சம் பயமுறுத்தவும் செய்கிறார். பலாத்காரத்துக்கு ஜனநாயகங்கள் தலை வணங்கப்போவதில்லை என்று ஒன்று சிலிர்ப்புச் சிலிர்க்கிறார்! அப்பொழுது கூட இங்கிலாந்து இல்லை; ஜனநாயகங்கள்! இப்படியாக,ஆபத்துக் காலம் வந்தால் பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களையும் சேர்த்துக் கொள்வதுபோல்பேசுகிறார்.

மறுநாள் ஹிட்லர் எல்லோரும் எதிர்பார்த்ததுபோல ஒருவரையும் தாக்காவிட்டாலும் தான் ஜெர்மனிக்குச் சாதித்துவிட்டதைப்பற்றிக் காரசாரமாய்க் கூறுகிறார். நடுவில் 'முஸோலினிக்கும்' சபாஷ் கொடுக்கிறார். இப்படியாக முஸோலினிக்கு இரண்டு இடத்திலிருந்தும் ஷொட்டுக் கிடைக்கிறது!

ஹிட்லர் ஒன்றும் முக்கியமாகப் பேசிவிடாவிட்டாலும் முஸோலினியுடன் எதிர்காலத் திட்டம் தயாரித்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அடுத்த வாரம் அது வெளியிடப்படுமாம். ஆம்; அதுவரை உலகத்தின் கதி திரிசங்கு சுவர்க்கத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு சுபாஷ் போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டு 'சபாஷ்!' பட்டம் வாங்கிவிட்டார். ஆனல் பட்டாபியின் தோல்வியை காந்திஜி தன் தோல்வியாகக் கருதுகிறார். இனிமேல் காங்கிரஸை சுபாஷின் நண்பர்களான தீவிரவாதிகளிடம் விட்டு விட்டு தனது சிஷ்யர்கள் வெளியேறி, வெளியேயிருந்து சேவை செய்யலாம் என்று அறிக்கை விடுத்திருக்கிறார்.

பறிமுதலான நிலங்களை திரும்பிப்பெற்ற குடியானவர்கள் பர்டோலியில் விழாக்கொண்டாடுகிறார்கள். அக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட காந்திஜி மறுபடியும் அந் நிலங்களை இழக்கத் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறார்.

ஸ்ரீ. பஜாஜ் ஜெயபூர் உத்தரவை மீறப் போவது நிச்சயம். இவ்வார முடிவிற்குள் ஸ்ரீ. பஜாஜ் கைது செய்யப்பட்டு அதனல் ஆபத்தான நெருக்கடி ஏற்படும்.

ராஜ்கோட் மன்னர் உடன்படிக்கையை மீறியதல்லாமல் சர்தார் படேலின் பேரில் பழியைப் போடுகிறார்! ராஜீய ஏஜண்ட் தூண்டுதலின் பேரில் அடக்குமுறை திவ்யமாய் நடந்து கொண்டிருக்கிறது. ஹிந்து முஸ்லீம் பிளவை உண்டாக்கி அதிகாரிகள்கிளர்ச்சியைக் கொல்லப் பார்க்கிறார்கள்.

சமஸ்தானதிபதிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு நடத்தும் ராஜீய ஏஜண்டின், அதிகார வர்க்கத்தின் அக்கிரமங்களை சகிக்காமல் காந்திஜி தானே சமஸ்தானப் போரைத் தலைமை வகித்து நடத்தப்போவதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராக ஓமந்தூர் ஸ்ரீ. ராமஸ்வாமி ரெட்டியாரும் உபதலைவராக ஸ்ரீ. பி. எஸ். குமாரஸ்வாமி ராஜாவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

(503-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் பதில் சொல்வதற்குள் அவர் குழந்தை காமாட்சி ஒரு வாழை இலையில் குத்து வெண்ணையையும் இரண்டு ஊத்தப்பத்தையும் கொண்டுவந்து கொடுத்தாள். இதல்லவோ கிராம முன்னேற்றமென்று சொல்லிக்கொண்டு நான் சொல்லிவிருந்து செயலுக்கு மாறினேன். என் நண்பரும் கொஞ்சம் புன்சிரிப்புடன் பேசிய களைப்பு மாறி சிற்றுண்டியைக் கவனிக்க ஆரம்பித்தார். எங்கள் அரசியல் கோபம் பறந்து ஓடிவிட்டது.

அதை முடித்துவிட்டு காங்கிரஸ் மந்திரி சபையை இன்னும் கொஞ்சம் கவனிப்போம் என்று தீர்மானித்தோம். —மணி.

# கடற்கரைப் பெண்

(கு. ப. ரா.)

(கடற்கரை ஓரத்தில் அலைகள் வந்து திரும்பும் இடத்தில் ஒரு சிறுமி சித்திரப் பாவைபோல நின்றுகொண்டு கிழக்கு திக்கை உற்று நோக்கிக்கொண்டு வெகுநேரம் நிற்கிறாள். மாலைமங்கி இரவு வரும் நேரம்.)

கடற்கரைப் பெண்ணே, கிழக்கே என்ன ?
காலம் போவதறியாயா ?
இருள் சூழும் இந்த அரை ஒளியிலே,
அலைகளில் நின்று அசையாமல்,
எத்தைக் கண்டு ஏமாறுகிறாய்,
குழந்தாய், என்னென்ன பார்க்கிறாய் ?
பொங்கி வரும் அலை பாய்ந்தெழுந்து அதோ
பாவாடையைப் பற்றி நனைக்கிறதே !
விழுந்தூர்ந்து திரும்பும் தண்ணீர்
காலடி மணலைக் கவர்ந்து செல்கிறது ;
பனிக் காற்று பளிச்சென்று முகத்தில்
அறைகிறது, பெண்ணே அறியாயோ ?
தூரத்து வெளியிலே, கடலிலே,
விந்தையென்ன சொல்லேன், கொஞ்சம் !
அலைகளின் அழைப்பிலா இப்படி
அங்கம் நனைய அசைவற்றிருக்கிறாய் ?
பெரிய அலை வருகிறது, பின்வாங்கு
பெண்ணே, பின்வாங்கு !
அலையிலென்ன ஆச்சரியம் உனக்கு
அப்படி, அலையிலென்ன புதுமை ?
எங்கு பிறக்கிறதென்று உற்றுப் பார்க்கிறாய் !
எக்கணம் எழுகிற தென்று ?
என்றோ, எங்கோ, பிறந்த அலையிது பெண்ணே,
இங்கு வந்து இக்கரையில் முடிகிறது !
நடுக்கடலின் நிலையற்ற ஆழத்திலா ?
கடல் எங்கிருந்து கொந்தளிக்கிறது ?
காலத்தின் காலை யற்ற இருள்—
அதன் ஆழ்ந்த குகையிலிருந்தா ?
கண்டதைச் சொல்லு, பெண்ணே, கேட்டுக்கொள்கிறேன்
அலை, என்ன சொல்லிற்று குழந்தாய் ?

---

கிராம சேவை:

# திண்ணையில்

(தொடர்ச்சி)

(ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்)

"ஏண்டா? நெல் அரைக்கிற ஏந்திரம் பண்ணியாச்சோ?" என்று குளிருக் கடக்கமாய் நிறைச்சல் கட்டியிருக்கிற திண்ணையில் எல்லாரும் சேர்ந்தவுடன் ஆரம்பித்தார் நம் கோண கணபதி அய்யர்.

"ஆஹா, நான் ஒன்று பண்ணிக்கொண்டேன். கோபாலனும் ஒன்று செய்து கொண்டான். ஆனல் வீட்டிலே பொம்மனுட்டிகள் ரிமார்க்குகள் ரொம்ப பலமாயிருக்கு" என்று விசுவமும் கோபாலனும் சொன்னர்கள்.

"என்னடா ரிமார்க்குகள்?"

"அதை ஏன் கேட்கிறியள்? அவாள் என்ன சொல்ரு தெரியுமா? இந்த அரிசி எப்படியிருக்கு செக்கச் சிவேலென்று. சமைச்சா கேவருகு மாதிரி அஸிங்கம் புடிச்சாப்பிலே, இந்த விரை விரையா விகாரம் பிடிச்ச சோத்தை யார் தின்னுவா? குழந்தைக்கு உடம்புக்கு ஆகாது. இந்தக் கோணல் எல்லாம் யார் சொல்றது? அத்தைக் கேட்டு இந்த மாதிரி கூத்தாடறியள். யாராவது சாப்பிடவந்தால் இந்தச் சாதத்தை அவாள் இலையிலே எப்படி பறமார்ரது? இந்த மாதிரி யெல்லாம் கதை ஆத்திலே. மல்லிகைப்பூ மாதிரி மிஷன் அரிசியை விட்டுப்பிட்டு இதை யார்சமைச்சுப் போடுவா? சாப்பிடரவா தான் என்ன நினைச்சுக்குவா? கோபாலனுத்திலேயும் இந்த மாதிரி அவஸ்தைதான். ஊரிலிருக்கிற பொம்மனுட்டிகளும் வந்து கொஞ்சம் கொஞ்சம் அறைச்சார்கள். சுலபமாய்த் தானிருக்கிறது. ஆனல் அரிசி அழுக்கடைஞ்சாற்போலே இருக்கு. அழகா தீட்டிம்பிடணும்னு சொல்லிப் பிட்டார்கள். நானே நீங்க சொன்னமாதிரி நடக்கணும்னு பார்க்கிறேன். வீட்டிலேயோ முட்டுக்கட்டையா யிருக்கு. என்ன பண்ணுகிறது?"

"அப்படித்தாண்டா. அப்பா, அப்படித்தான் தகருர். ஒவ்வொரு பொம்மனுட்டிகளும் அவா அவா புருஷாள் முட்டாள் என்று தான் நினைக்கிருர்கள். முணு முணுத்துத் தள்ளுகிருர்கள். இந்த பழக்க வழக்கங்களெல்லாம் கொஞ்சத்திலே போகாதப்பா, போகாது. நாளாவட்டத்திலே தான் போகணும். வளர்த்த நாய் மாதிரி வந்து வந்து போராடும். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் போக்கடிக்கணும். வண்டி மாடுகளைப் பாரேன். ஒரு அடி புழுதி அல்லது முழங்கால் சேறு உள்ள அந்த வாய்க்காலிலும் பள்ளமும் படுகுழியிலும் மாடுகள் தட்டித் தடுமாறிக் கஷ்டப்பட்டு இழுத்துக்கொண்டு போகும். நீயும் எவ்வளவு கஷ்டப்பட்டு நல்ல பாதையா ரோட்டில் ஏற்றி விட்டாலும், அதுகள் கொஞ்சம் கொஞ்சமா, அந்த பழைய சேற்றில் தான் வந்து விழுந்து அழும். அந்த மாதிரி ரொம்ப நாள் பழக்கம். கொஞ்சத்திலே விடாது. கஷ்டப்படணும். வழிக்குக் கொண்டுவரணும். ஆனமட்டும் விட்டு விடாதே. விடாப்பிடியா யிருந்து சரிப்படுத்து."

"சரி மேலே சொல்லுங்கோ."

"அந்த அரிசி சாதம் ஆச்சா. கறிகள் கூட அதனதன் ஜலத்திலேயே வேக வைக்கணும்னு சொல்லிவிடு. பருப்புக்கூட கூடுமான வரையில் தோலியோடேயே இருந்தால் நல்லது. உளுத்தம் வடை கோவில்லே பண்ணி பிரஸாதம் கொடுக்கிருளே. அது நல்ல ருசியாயிருக்கு தேவதாப்பிரஸாதம் என்று சொல்ருளே தெரியுமா? அது பாதி ஊறினதும், ஊராததுமாக பாதித்தோல் போனலும் போகாவிட்டாலும் வடை பண்ணி விடுகிருர்கள்.

அது நன்றாயிருக்கு. அதேமாதிரி நாமும் வீட்டில் செய்தால் நன்றாய்த்தானிருக்கும். இதே மாதிரிதான் பயத்தம் பருப்புப் பாயஸமும். நம் வீட்டுப் பொம்மனாட்டிகள் நன்றாக ஊரவைத்து மேல் தோலே எல்லாம் தேய்த்துப் போக்கடித்து விட்டுத் தானே ஏதாவது செய்கிறார்கள். அதினாலே தான் ருசியே யில்லாமல் போய் விடுகிறது. அழகுக்குப் பார்த்தால் ருசியுமில்லை. சத்துமில்லை. அதே மாதிரிதான் கறிகாய்களையும் சிலபேர் சொல்கிறார்கள். ஆனவரையில் பச்சையாகச் சாப்பிடுவதே நல்லது என்று. இதெல்லாம் நம் நாக்குக்கு நன்றாகத் தெரியும். அதற்குத் தகுந்தாற்போல் செய்ய வேண்டும்.''

"சரி, இருக்கட்டும். இப்போ சர்க்கார்லே வாய்தாவைக் கொஞ்சம் குறைக்கணும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்களே, ஏதாவது நடக்குமா?''

"குறைக்கலாம். ஆனால் இப்போ இருக்கிற ஸ்திதியிலே எப்படிக் குறைப்பார்கள்? கள்ளுக்கடை, சாராயக்கடைகள் எல்லா ஜில்லாக்களிலேயும் எடுத்துவிடவேணும்னு ஏற்பாடு இல்லையா? அதிலேயிருந்து வருகிற வரும்படி போக அந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவே செலவுக்குப் பணம் வேண்டியிருக்கிறது. இப்பவே சர்க்காரில் பணமில்லாமல் ஜனங்களிடத்திலே கடன் வாங்கியிருக்கிறார்களே.''

"சர்க்கார் செலவைக் கொஞ்சமாவது குறைக்க முடியாதா?''

"கொஞ்சதூரம் குறைக்கலாம்னு தோணுகிறது. ஆனால் நம்மைப்போலொத்தவர்கள் நினைக்கிறாப்போல சொல்லுகிறாப்போல நடக்குமா? இப்போ அநேகம் பேர் சர்க்காரில் பென்ஷன் வாங்கிக்கொண்டு நல்ல அநுபவத்தோடு சும்மா காலம் கழிக்கிறார்கள். இந்த பென்ஷன் தாரில் அநேகம் இன்ஜினீர்கள், ஜட்ஜிகள், மாஜிஸ்ரேட்டுகள், ரிவின்யூ இலாகாக்காரர்கள், போலீஸ்காரர்கள், இன்னும் அநேக டிபார்ட்டு மெண்டுக்காரர்களெல்லாம் இருக்கிறார்கள். அதில் அநேகம் பேர் நல்ல சக்தியோடேயுமிருக்கிறார்கள். சம்பளச் செலவு இல்லாமல்கூட தேசத்திற்கு உழைக்கவேணுமென்ற ஆசையும் அவர்களிட மிருக்கிறது. சர்க்காரில் ஒரு அறிக்கை போட்டார்களானால் அநேகம் பேர் வெளிவரத் தயார். கூடுமானவரையில் சில உத்தியோகங்களுக்கு அவர்களை ஹானரரியாக ஏற்படுத்தலாம். காசு செலவும் மிஞ்சும். சர்க்காருக்கு வேலையும் நன்றாயிருக்குமென்று தோன்றுகிறது.''

"இவைகள் சர்க்கார் பாடு, என்ன செய்கிறார்களோ? பார்க்கவேண்டும். இப்போ என் கடன் வட்டி ஏறிக் கொண்டே போகிறது. கடன் நிவர்த்தி மசோதாவிலே ஏதாவது பலன் உண்டா?''

"பலனிருக்கு. வட்டி ஜாஸ்தியில்லை. என்று ஏற்பாடு ஆய்விட்டது. எப்படியிருந்தாலும் மொத்தத்திலே, சீக்கிரத்தில், கடனில் முழுகுகிறவன் இன்னும் கொஞ்சநாள் கழிச்சு முழுகுவான் என்று எனக்குத் தோணுகிறது. அவ்வளவுதான். எப்போ நம் வரவுக்கும் சிலவுக்கும் சரிக் கட்டவில்லையோ அப்போ முழுகித்தானே போகவேண்டும்.''

"கொஞ்சம் பணம் சர்க்காரில் கடன் வாங்கி முன் கடனைத் தீர்த்துப்பிடலாம்னு பார்க்கிறேன்.''

"நல்லதுதான். வட்டி குறைச்சல். ஆனால் சர்க்காரில் கடன் கேட்டு வாங்குகிறதென்றால் சுலபமா முடியுமா? என்னன்னமோ ரூல்கள் எல்லாமிருக்கும். நமக்கு அர்த்தமே புரியாது. நாமொன்று நினைப்போம். தாலூகாக் கச்சேரியிலே கலெக்டர் ஆபீஸிலே வேறே அர்த்தம் பண்ணுவார்கள். சர்க்கார் பணம் கொடுக்கிறதென்றால் கொஞ்சத்திலே ஆச்சா? எத்தனைபேர் சிபார்சு? எவ்வளவு அலையணும்? ஊரிலே மணியகாரன், கணக்குப்பிள்ளை சிபார்சு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர், அதற்குமேலே, அப்புறம் தாசீல்தார், பிறகு டிட்டி கலெக்டர், இன்னும் இந்தமாதிரி இடமெல்லாம் காகிதம் திரும்பித் திரும்பி கிடந்து, இல்லை உண்டு என்று வர எத்தனையோ நாள்கள். சர்க்காரிலே என்னமோ நல்லதுதான் நினைக்கிறார்கள். அதற்கு ஏதோ ஏற்பாடு செய்யறார்கள். ஆனால் ரொம்ப ரொம்ப அதி ஜாக்கிரதை உத்தியோகஸ்தர்கள் எடுத்துக்கிறத்தினாலே பயம் அதிகமாய்

போயிற்று. எது எப்படி யார் தலையிலே விழுமோ என்று ஒவ்வொரு உத்தியோகஸ்தனும் தட்டிக்கழிக்கப் பார்க்கிறுன். துணிந்து இறங்குகிறதில்லே. அதினுலே கடன் கிடைப்பது ரொம்ப கஷ்டமப்பா. அப்படியே கிடைச்சாலும் ரொம்ப தாமஸம். நிபந்தனைகளும் மிகவும் அதிகம். வாங்கினவன்களும் கொஞ்சமாகிலும் உத்தியோகஸ்தர்களுக்கு அனுகூலமாகவே நடந்துகொள்ளணும். உத்தியோகஸ்தர்களுக்கு சர்கூட் வருகிறவர்களுக்குக் கூட சமயா சமயங்களில் உதவவேண்டும். எப்படியும் வட்டி குறைச்சல்தான். முடியுமானல் பார். அந்த ரூல்களேயும் நன்ருய்ப் படிச்சுப் பார். பிறகு ஏற்பாடு செய்."

"நீங்கள் சொல்லுகிருப்போல் அந்த சர்க்கார் சட்டங்கள் ஒன்றும் சரியாக அர்த்தம் புரிகிறதில்லேயே! ஏன்?"

"அடே, அந்த சர்க்கார் சட்டங்கள், ரூல்கள், பாஷையே வேற யாத்தான் இருக்கு. சட்ட புஸ்தகங்களே எடுத்துக்கோ. வக்கீல்கள் அதிலேயும் கோணல் படிக்கிருர்கள். இந்தக் கோணல்களேத் திருத்த இன்னம் கொஞ்சம் கூட்டல் கழித்தல் ரூல்கள். அந்த ரூல்களில் இன்னும் அவஸ்தை! அதற்குத் திருத்தங்கள்! இந்த மாதிரியே போய்க்கொண்டிருக்கும் பக்கம் பக்கமாக. அந்த ரூல்கள் தான் செய்கிருளே நன்ருக நமக்கெல்லாம் தெரிகிருப்போல் எழுதக்கூடாதா? போகட்டும், கிராம சம்பந்தபட்ட விஷயங்களிலே ஏதாவது, சட்டமோ பிரச்னேயோ ஏற்பட்டால் கிராமத்திலே தெரியறதா? அந்த விஷயங்களே, கிராமச்சாவடிகளிலே அல்லது பகிரங்கமான இடத்திலே நோடீஸ் போர்டிலே போடப்படாதா? கொஞ்சமாவது நம்மைப்போலொத்தவர் தெரிஞ்சுகொள்ளமாட்டார்களா? மணியக்காரன், கணக்கு பிள்ளேகளுக்கு ஏதாவது சர்க்கார் பிரசுரப் பத்திரிகைகள் வந்தால், அவை அவன் கட்டோடே, காகிதத்தோடே நின்றுகுப் போய்விடுகிறது. ஏதாவது அதிலே, தெரிஞ்சுக்கணும்னு அந்த பாஷையே நமக் புரிகிறதில்லே. சர்க்காரில் சிலாவணி, நாணயமாற்று என்று கொஞ்சகாலம் பேபர்களிலே திண்டாடிற்றே அதிலே நமக்கு எவ்வளவு புரிந்தது? அவ்வளவு தான் இங்கேயும். இந்தச் சட்டங்களில் மாத்திரம் அல்ல. எல்லா டிபார்ட்டுமெண்டு உத்திரவுகள், ரெகுலேஷன்கள், ரூல்கள், சட்டங்கள், ஆக்டுகள், அடேயப்பா, அதெல்லாம் படித்துச் சரியா அர்த்தம் பண்ணிக்கணும்னு மூளேயே கலங்கிவிடும்டா. உஷார்."

"ஆமாம் ஆமாம், நாமெல்லாரும் சேர்ந்து ஸர்க்காருக்கு இந்தமாதிரி மனுச் செய்துகொள்ளுவோமே. நம் ஊர் கிராமச் சாவடியில் அல்லது வெளிப் பொது மண்டபத்தில் கிராமத்தார்களுக்கு அவசியமானவிஷயங்களே தெளிவான பாஷையில் அர்த்தம் புரியும்படியாக பிரசுரம் செய்யவேண்டும். செய்ய ஒப்புக்கொள்ளமாட்டார்களா? எவ்வளவோ விஷயங்கள் நமக்கு தெரியாமலிருக்கிறதே ஒன்றும் தெரிஞ்சுக்காமல் இருந்தால் இந்தக் காலத்தில், நாம் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லே. முன்னுக்கும் வர முடியாது."

"தெரிஞ்சுதா? கிராம முன்னேற்றம் என்று திட்டம்போட்டிருக்கிருர்களே, சர்க்கார், அதிலே இதுதான் முக்கியம் என்று சொல்லு."

# மறு மலர்ச்சி

(ஸ்ரீ ஸு. ஸேதுராமன்)

என்னவோபோல் இருந்தது எனக்கு. தெரியாத்தனமாக வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே, இப்படியே திரும்பிப் போய் விடலாமா என்றுகூட மங்கலான ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. அதுவும் கோண மதகைத் தாண்டிக் குளத்தங்கரை வழியாக வண்டி வந்துகொண்டிருக்கும் போதே ஏதோ ஓர்வித ஸங்கோஜம், கன்னக்கோலுடன் திருடச் செல்பவனைப் போல மனதில் பயம், எல்லாம் உண்டாகி விட்டன.

அப்போதுதான் கோயிலில் அர்த்த ஜாம மணி அடித்துக்கொண்டிருந்தது. அவ்வளவு நாழியாகிவிட்டது ஊருக்குப் போகும்போது. இலுப்பைத் தோப்புவழியாகப் பெருமாள் கோயில் வாசலண்டை வண்டி வந்தபோது "யாரு வண்டிலே?" என்று யாரோ கேட்டார்கள்: எனக்கு மிகவும் கூச்சமாகத்தான் இருந்தது! "சந்துருவையர் ஆத்துக்குப் போகிற வண்டி" என்று சொல்லிவிட்டு "மாட்டைக் கொஞ்சம் விசையிலே விடு!" என்று வண்டிக்காரனைத் துரிதப்படுத்தினேன்.

எப்படியோ வந்துவிட்டேன். எனக்கே சரியாக ஞாபகமில்லை,எப்போதுவந்தேன், எவ்வளவு நாழிகையாகத் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தேன் என்று. கதவைத் தட்டுவதற்குக் கைகள் சோர்ந்தன. மனதுக்குள் அதைரியம்.

'வந்த சோடே தெரியாமல் திரும்பிப் போய்விட்டால் என்ன?...சே! நன்றாயிராது. சண்டையோ சச்சரவோ கிடையாது. அப்படி இருக்கையில் நான் ஏன் ஸங்கோஜப்படவேண்டும்?.....அப்படியே இருந்தாலுந்தானென்ன? அத்திம்பேர் 'போன'பிறகு அத்தையை நான் பார்க்கவே இல்லையே!...அவள் என்னிடம் எத்தனையோ உசிராக இருந்தாளே...அவளைப் பார்க்காமல் போனால் எவ்வளவு ஏக்கப்படுவாள்! இப்பொழுதில்லாவிட்டால், இனிமேல் ஒருநாளும் அவளைப் பார்க்கவே முடியாதே......நானாகப் போனால்தானே உண்டு? பாவம், அவளைப் பார்த்து ஐந்து வருஷங்களுக்குமேல் இருக்குமே! இப்போதாவது என்னைப் பார்த்தால் அவள் மனசிலே குறையில்லாமல் செத்துப் போவாள்...' என்று அடுக்கடுக்காக யோசனைகள் போய்க்கொண்டேயிருந்தன. ஆனால் எத்தனைநேரம்தான் நான் திண்ணையிலேயே குளிரைப் பொறுத்துக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியும்?

ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு கதவைத் தட்டுவதற்காகக் கதவண்டை சென்றேன். கால்கள் பின்னுக்கிழுத்தன. "ஆமாம், இத்தனை நாட்களாகப் போகாமல் பேச்சுவார்த்தைகூட இல்லாமல்—இன்றையதினம்—ராத்திரி வேளையில் திடுதிப்பென்று சென்றால்...' இப்போதுதான் இந்தாத்துக்கு வர உனக்கு வழி தெரிஞ்சுதா?' என்று குத்தலாகக் கேட்பானே சந்துரு" என்று ஓர் அலை. மறுபடியும் சோர்ந்து போய்த் திண்ணையில் உட்கார்ந்து கொண்டேன்.

வேறு வழிதான் என்ன? எவ்விதமாகவோ தைரியப்படுத்திக்கொண்டு நாலைந்து தடவைகள் கதவைத் தட்டினேன். கைகள் நடுங்கத்தான் செய்தன.

அப்போது சந்துரு இன்னும் திரும்பி வரவில்லை. ஆபீஸ் 'துரை' வீட்டுக் குழந்தைக்குத் தேள் கொட்டி விட்டதாம். அதற்காக மந்திரிக்கப் போயிருப்பதாகப் பிற்பாடு தெரிந்துகொண்டேன். அவன் மனைவி தான் கையில் பெட்ரூம் விளக்குடன் வந்து கதவைத் திறந்தாள். என்னை அவள் அதிகமாகப் பார்த்தது கிடையாது.... "சந்துரு தூங்கிப்போயிட்டானா?" என்று புருஷ தோரணையில் பதிலை எதிர்பாராத கேள்வி கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

என் குரல் எப்படித்தான் அத்தையின் காதில் விழுந்ததோ! ஈன ஸ்வரத்தில் "மகமாயி தந்த பிச்சை—சாமா குரல் மாதிரி இருக்கே!..." என்றாள். மிகவும்

பிரயாசையுடன் போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

முகம் கொஞ்சம் தெளிவாகத் தான் இருந்தது. காமிரா உள்ளில் படுத்துக் கொண்டிருந்தாள். கூடத்தில் கணப்பு எரிந்துகொண்டிருந்தது.

திடீரென்று நிசி வேளையில் நான் அங்கு வருவேன் என்று அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள். ஏன்? அங்கு வராமலேயே இருந்துவிடுவேன் என்று கூட முடிவு கட்டியிருப்பாள். அந்த மாதிரி எண்ணுவதற்குப் போதிய காரணங்கள் இல்லாமலில்லை.

* * *

அத்தைக்கு உடம்பு மிகவும் கவலைக்கிடமாக இருந்ததென்று எனக்கு ஐந்தாறு நாட்களாகவே தெரியும். பேச்சு வார்த்தைகள் இல்லாவிட்டாலும் அவ்வப்போது தகவல்கள் மட்டும் வந்து கொண்டேயிருக்கும்.

ஆனால் அன்று சாயந்திரம் சந்துரு அவசர அவசரமாக எங்கேயோ போய்க் கொண்டிருந்தான். என் நண்பர் ஒருவர் "அவன் அம்மாவுக்கு 'இழுத்துக்'கொண்டிருக்கு...லீவு கேட்கத் துரை வீட்டுக்கு ஓடுகிறானே என்னவோ?" என்று காற்றுவாக்கில் சொன்னார். என் மனதுக்குள் சில நாட்களாகச் சுழன்று கொண்டிருந்த போராட்டம் புகைச்சலெடுத்து மூளையைக் குழப்ப ஆரம்பித்துவிட்டது.

சந்துருவும் நானும் அத்தான்--அம்மாஞ்சிகள் தான். பாலியத்திலிருந்தே சேர்ந்து படித்தவர்கள். போதும் போதாததற்குப் பக்கத்துப் பக்கத்து ஆபீசுகளில் வேலையும் ஆகியிருந்தது. 'ஜாதக விசேஷம்' என்று சொல்லுகிறார்களே, அதுவாகத் தான் இருக்கவேண்டும்—எப்படியோ ஒருவருக்கொருவர் தப்பான எண்ணம் கொள்ளும்படி சந்தர்ப்பங்கள் வந்து சேர்ந்தன. கொஞ்ச நாட்களுக்குக் கறுமுறுவென்றே பழகி வந்தோம். அதிகமாகப் பேசிக் கொள்வதில்லை. ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போய் வருவதும் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் 'நீ யாரோ நான் யாரோ' என்ற தோரணைக்கு வருமளவு மனஸ்தாபம் விருத்தியாகவில்லை. அப்படியாவதற்கும் அதிக நாள் ஆகி விடவில்லை...சந்துருவின் மைத்துனி கலியாணத்துக்கு நாங்கள் போக முடியவில்லை—ஆத்தில் வைசூரி போட்டியிருந்தது தான் காரணம். தப்பாகவே எதையும் எடுத்துக் கொள்பவனுக்கு என் நிலையை அறிந்துகொள்ள முடியவில்லை... இன்னும் சில சில்லரைத் தாபங்கள்—எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, என் சித்தப்பா இறந்துபோனபோது 'துக்கம் கேட்க' வரவில்லை—பக்கத்து ஊரில் ஜாகை வைத்துக்கொண்டிருந்துங்கூட. இன்னும் எத்தனையோ!...பலன் என்னவென்றால் விரோத மனோபாவந் தான். எவ்விதமாக வெல்லாமோ காரண காரியங்கள் முளைத்துப் படருகின்றன! காலப் போக்கைத் தவிர அவற்றிற்கு வேறு யார் ஜவாப்தாரி?

அவன் வீட்டில் நான் காலடி எடுத்து வைத்து அப்போது ஐந்து வருஷங்களாயிற்று. அவனும் வந்ததில்லை. எவ்விதமாகத் தான் விரோத பாவம் வளர்ந்ததென்று எனக்குப் பிடிபடவேயில்லை.

அவனுடன் பழையபடி சௌஜன்யமாக இருக்க வேண்டுமென்று சில சமயங்களில் தோன்றுவதுண்டு. ஆனால் வரட்டுக் கௌரவமாகத்தானிருக்க வேண்டும், நானாக வலிந்து நெருங்குவதென்றால் மனதுக்கு வேதனையாக இராதா? ஒரு கால் சந்துருவும் என்னைப் போலவே எண்ணினானோ என்னவோ?

இந்த நிலையில், அங்கு போய்க் கதவைத் தட்டி, நானாக உள்ளே செல்வதென்றால் எவ்வளவு கூச்சமாக இருக்கும், சுயமரியாதைக்குக் குறைவாக இருக்கும்?

ஆனால் அத்தை மரணாவஸ்தையிலிருக்கிறாள். எந்த நிமிஷத்தில் அவள் மூச்சு நின்று விடுமோ என்று எல்லோருக்கும் திகில். கொஞ்சம் கொஞ்சம் நினைவு இருக்கிறபோதே அவளை ஒரு தடவையாவது போய்ப் பார்க்க வேண்டுமென்று ஒரு புறத்தில் மனது துடித்தது. என்ன பண்ணுவது? கடைசியில் கௌரவத்தைப் பாராட்டாது, அஸ்தமனமாகியிருந்தாலுங் கூட, வாடகை வண்டி ஒன்று திட்டம் செய்துகொண்டு கிளம்பிவிட்டேன்.

* * *

உள்ளே போனபிறகு தான் அத்தை நான் எதிர்பார்த்த அளவு 'பேபார்ஸான்'

நிலையில் இல்லை என்று தெரிந்துகொண்டேன்.

என்னை வாய்திறந்து வரவேற்க முடியவில்லை. என்னைக் கண்டதும் மட்டுக்கு மீறி அழுகைதான் வந்தது. "என்னப்பன் வராமேயே இருந்தாடுவயோன்னு நினைச்சேன்... உனக்காகத் தோணி வந்தயா... சந்துருவைக் கெஞ்சினேன், கூட்டிண்டு வாடான்னு..." என்று கடைசியாக உதடுகள் வெட வெடக்க, உணர்ச்சி மேலீட்டால் அழுதுவிட்டாள்.

நாழியாகிவிட்டதால், சந்துருவின் மனைவி, குழந்தைகள் எல்லோரும் மாடியில் படுத்துக்கொள்ளப் போய்விட்டனர். கீழே அத்தையும் நானுந்தான். இரவுவெகுநேரம் ஆகியும் சந்துரு திரும்பி வரவில்லை. தூக்கத்தில் யாரையும் எழுப்ப வேண்டாமென்று திண்ணையிலேயே படுத்திருப்பானோ என்று எண்ணி, இரண்டொரு தடவை வெளியே போய்ப் பார்த்தேன்—அதுவும் அத்தைக்காக! நல்ல வேளை, அவன் வரவில்லை. எனக்கு ஒரு விதத்தில் அது தைரியமாகத்தான் இருந்தது.

தாய்போல உள்ளக் கனிவு கொண்ட அவளுக்கு அப்போது எவ்வளவு ஆறுதல், சாந்தி எல்லாம் கிடைத்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது எனக்கே கொஞ்சம் கர்வம் உண்டாயிற்று. ஒரு விதமான மட்டற்ற ஆனந்தம் உண்டாயிற்று. என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தோம், வெகுநாழிகை வரையிலும்.

விடியற்காலம் சுக்கிரோதயம் ஆகுமுன்னரே, நீலத்தநல்லூர் பஸ் போக்குவரத்து ஆரம்பமாகிவிட்டது! சந்தை கூடும் நாளானபடியால் அடிக்கடி பஸ் போய்க்கொண்டிருந்தது.

"அத்தை, காலையில் ஆறுமணி ரயிலில் என் ஸ்நேகிதர் ஒருவர்வருகிறார்... ரயிலடிக்குப் போகணும்...போயிட்டு இன்னொரு தடவை கட்டாயம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

"சந்துருவைப் பார்க்கவேயில்லையே!... அவன்தான் சின்னவயஸுலே யிருந்தே 'ராங்கி'க்காரன்...அதற்காக நீ..." என்று என்னவோ சொன்னாள். நான் அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல், "அதுக்கென்ன இப்போ ?" என்றேன்.

"அவளை—(என் மனைவியை)ப்பார்த்து ரொம்ப நாளாச்சு. பாவம், தாயில்லாப் பொண்ணு...என்னிக்கி அவளைப் பார்க்கப் போகிறேனோ!..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன அத்தை, இதுக்கெல்லாம் ஒரு அழுகையா?...நான் அழைத்துக்கொண்டு வருகிறேன்..." என்றேன்.

யாரும் தூங்கி எழுந்திருப்பதற்கு முந்தியே நான் திரும்பி வந்துவிட்டேன். பெரிய சுமை இறங்கினாற்போல இருந்தது எனக்கு, வீட்டுக்கு வந்து சேர்ந்ததும்.

மறுநாள் சாயந்திரம் என் மனைவியுடன் மற்றொரு முறை அத்தையைப் பார்க்கப் போவதைப்பற்றி என் மனதில பெரிய போராட்டமாக இருந்தது.

எதிர்பாராத விதமாய், அசட்டுச் சிரிப்புடன் சந்துருவே தயங்கித் தயங்கி வந்து நின்றான்! முதல் நாள் இரவு நான் என்ன அவஸ்தைப் பட்டேனோ அந்த நிலையில் அவனும் இருப்பதுபோல் தோன்றியது. யாரோ பிடரியைப் பிடித்துத் தள்ளின வேகத்தில் ஓடிவந்திருப்பன் போலத்தான் இருந்தது அவனுடைய முகத்தைப் பார்த்த போது.

'வா' என்று சொல்லக்கூட எனக்குத் தோன்றவில்லை. அவனுடன் எப்படிப் பேச்சுக் கொடுப்பது என்று புரியாமல் தவித்தேன். ஆனால் என்னைவிட எதையும் சமாளித்துக்கொண்டு போவதில் அவன் கெட்டிக்காரனாகையால், தன் கலவரத்தைக் காட்டிக்கொள்ளாமல் "என்ன சாமா, அத்தி பூத்தாப்போல வந்தவன்... என்ன கொள்ளைபோகிற அவசரம் உனக்கு?..." என்று என்னைக் குற்றம் சாட்டும் பாவனையில் சொன்னான். எனக்கு இதெல்லாம் பிரமிப்பாக இருந்தது.

"என்னடா! ராத்திரி எல்லாம் ஆத்துக்கு வராமல் எங்கே போயிருந்தே?..." என்று குறும்பான ஒரு பதில் கேள்வி தானாகவே என் வாயிலிருந்து வந்துவிட்டது.

அன்றைய தேதி என் டைரியில் "மறுமலர்ச்சி" என்ற இரண்டே வார்த்தைகளைத் தவிர வேறு ஒன்றும் குறிக்கவில்லை.

# காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு

ஆசிரமத்தைச் சுற்றி இப்பொழுது கொடிய பஞ்சம் பரவி நிற்கிறது. நூற்பவர்கள் நாளுக்குநாள் ஆசிரமம் உதவியை அதிகமாக நாடுகிறார்கள். எங்கள் 3000 நூற்காரிகள் 220 கிராமங்களிலிருந்து வருபவர்கள். இவர்களில் அநேகர் யாருமற்ற அகதிகள். மழையில்லாமையினால் விவசாய வேலை அறவே நின்றுவிட்டது. ஆகவே நூற்பது நீங்கலாக இவர்களுக்கு வழியுமில்லை. நூல் நூற்றல் இவர்களுக்கு கற்பகமாக இருக்கிறது.

1937 அக்டோபர் முதல் டிஸம்பர் இறுதி வரை ஆசிரமம் 7,451-14 ராத்தல் நூலும், 9,420-6-3 ரூ. பொறுமான கதரும் உற்பத்தி செய்தது. 1938-ல் மேற்கண்ட காலத்தில் 18,548-1 ராத்தல் நூலும் 30-822-8-9 ரூ. கதரும் உற்பத்தி ஆகியுள்ளது. 1937 கடைசி மூன்றுமாதங்களிலும் நூற்கும் கூலியாக ரூ. 4,412-7-3ம், 1938-ல் அதே காலத்தில் ரூ. 13041-15-0ம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று மடங்கு அதிகமாயுள்ளது. பஞ்சத்தின் கொடுமைக்கு வேறு அத்தாட்சி வேண்டுமா?

தீபாவளிக்குப் பிறகு விசேஷமாக விற்பனை இல்லை. ஆனால் சென்ற மூன்று மாதங்களில் பஞ்சக் கொடுமையின் காரணமாக உற்பத்தி அதிகம். இப்படியாக நம்மிடம் ரூ. 50 ஆயிரம் வரை சரக்குகள் தேங்கி நிற்கின்றன.

மூலதனத்தில் பாதிக்குமேல் கதராகவும் நூலாகவும் முடங்கிக் கிடக்கையில் மேலும் இப் பஞ்சத்தில் நிறுத்தாமல் உதவி செய்வது கடினமாக இருக்கிறது.

கதர் அன்பர்களுக்கு நம்முடைய வேண்டுகோள் இதுதான். தயவுசெய்து தாங்கள் கதர் உடுத்துவதுடன் நின்றுவிடாமல் தங்கள் நண்பர்களையும் கதரணியச் செய்யுங்கள். கதர் தேச விடுதலையின் சின்னம். கதர் ஆயிரக்கணக்கான ஏழைக் குடியானவர்களுக்கு உயிர்த்துணை. ஆகவே ஒவ்வொரு கதரன்பரும் வருஷம் பூராவிற்கும் வேண்டிய கதரை இப்பொழுதே வாங்குவார்களாக! அவர்கள் இப்படிச் செய்வது பஞ்சத்திலிருந்து வாடும் மக்களை கரையேற்றியதாகும்.

ரூ. 25-0-0-க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு காந்தி ஆசிரமத்திலிருந்து வாங்கும்பக்ஷத்தில் உங்கள் ரயில்வேஸ்டேஷனில் செலவில்லாமல் டெலிவரி செய்து தரப்படும். உங்கள் தேவைகளை காந்தி ஆசிரமத்திலிருந்தோ அல்லது அவர்களுடைய சேலம், வேலூர், நாமக்கல் கிளைகளிலிருந்தோ மற்றும் அகில இந்திய சர்க்கார் சங்கத்தின் பல்வேறு கிளைகளிலிருந்தோ வாங்கிக் கொள்ளலாம்.

கதரன்பர்கள் எங்கள் வேண்டுகோளுக்குப் போதிய ஆதரவளித்து ஆயிரக்கணக்கான— கதர் கொடுக்கும் கஞ்சிக்குக் காத்திருக்கும்— ஏழைகளின் வீடுகளில் அடுப்பணையாமல் பார்த்துக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

திருச்செங்கோடு
28-1-39

மானேஜர்

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# டெலிபோன் செய்தி

(ஸ்ரீ. வி. ஆர். சுந்தரராமன், எம். ஏ.)

மணி இரண்டரை இருக்கும். நல்ல வெய்யில். அப்பொழுதுதான் சிற்றுண்டி அருந்துவதற்காக வெளியே சென்று விட்டுத் திரும்பிய கோபாலசாமி "ஸ்ஸு, அப்படா!" என்று சொல்லியவண்ணம் பெருமூச்சு விட்டுக்கொண்டே ஆபீஸில் நாற்காலியில் அமர்ந்தான். ஐந்து நிமிஷங்கட்கெல்லாம் ஒரு குமாஸ்தா அவனிடம் வராகசாமிக்கு டெலிபோனில் வந்த செய்தி என்று சொல்லி ஒரு துண்டு கடிதத்தை நீட்டினான். அதில் குறித்திருந்தது அடியிற்கண்டவாறு:—

"மகன் கீழே விழுந்துவிட்டான். பலத்த காயம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறான்."

இச் செய்தியை அனுப்பியவனின் பெயர் "அபிராமன்" என்று அந்த குமாஸ்தா சொல்லிவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டான்.

அந்த ஆபீஸில் உள்ள பல பிரிவுகளுள் ஒன்றிற்கு மானேஜர் கோபாலசாமி. அவனுக்கு அடுத்தபடியாக அந்தப் பிரிவில் உதவி மானேஜரா யிருந்தவன் தான் வராகசாமி என்பவன். அவனும் அன்று காலை ஆபீஸுக்கு வந்து தானிருந்தான். ஆனால் கொஞ்சம் தலைவலியும் ஜலதோஷமும் இருந்ததால் கோபாலசாமியிடம் சொல்லி லீவு வாங்கிக்கொண்டு ஒரு மணிக்கே வீட்டிற்குப் போய்விட்டான். வராகசாமியைத் தேடி வந்த குமாஸ்தா அவனைக் காணாது அவனுடைய இடம் காலியா யிருந்ததால் தான் அக்கடிதக் குறிப்பை மானேஜர் கோபாலசாமியிடம் கொண்டுவந்து கொடுத்தான்.

வராகசாமிக்கு ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களும் உண்டு. பிள்ளைக்குப் பத்து வயது இருக்கும். பெண்கள் இரண்டும் சிறு குழந்தைகள். மூன்று வயதில் ஒன்று, நான்கு மாதங்களில் ஒன்று. தான் உத்தியோகம் செய்து வந்த பம்பாயில் தென்னிந்தியக் குழந்தைகட்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கத் தக்க வசதிகள் இருந்தபோதிலும் சிக்கனத்தைக் குறித்து பிள்ளையை வராகசாமி சென்னையில் தன்னுடைய மைத்துனியிடம் படிப்பிற்காக விட்டிருந்தான்.

வராகசாமியின் பிள்ளை சென்னையில் படித்துவந்தது அவனுடைய மானேஜரும் நண்பனுமான கோபாலசாமிக்குத் தெரியும். ஏன்? இன்னும் அந்த ஆபீஸில் அவர்களுடன் வேலை செய்துகொண்டிருந்த ஏழு, எட்டு தென்னிந்தியர்கட்குங் கூடத் தெரியும். ஆகையால் குமாஸ்தா டெலிபோனில் வந்த செய்தியைக் கொடுத்தவுடன் கோபாலசாமிக்குச் சற்று சந்தேகமாய்த்தான் இருந்தது. ஏனென்றால் வராகசாமியின் பிள்ளை தான் தற்போது சென்னையில் இருந்தானே. அவன் எப்படி பம்பாயில் கீழே விழ முடியும்? எனவே ஒருக்கால் அந்த ஆபீஸில் உத்தியோகம் செய்துவந்த வேறு எந்த தென்னிந்தியனுடைய குழந்தையாவது கீழே விழுந்துவிட்டு, சமாசாரம் தவறுதலாக வராகசாமிக்கு அனுப்பப்பட்டிருக்குமோ என்று எண்ணினான்.

எல்லாவற்றிற்கும் ஆபீஸில் வேலை செய்த இதர தென்னிந்தியர்கட்கும் விஷயத்தைச் சொல்லி விடுவதென்று தீர்மானித்தான். முதன் முதலில் தன்னுடைய வீட்டிலேயே இத்தகைய விபத்து ஒன்றும் நடக்கவில்லையென்று அருகிலிருந்த டெலிபோன் மூலம் கேட்டுத் தெரிந்துகொண்டான். அதற்குப் பின்பு விஷயத்தை மற்றவர்கட்கும் பிரஸ்தாபித்தவுடனே அவர்களும் பரபரப்புடன் தங்கள் தங்கள் குழந்தைகட்கும் ஒன்றும் ஆபத்து ஏற்படவில்லையென்று தெரிந்துகொள்ளுவதற்குள் ஒவ்வொருவருக்கும் உயிரே போய்விட்டது என்று சொல்லவேண்டும்.

கடைசியில் அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி கூட்டம் போட்டனர். அதில்

ஒருவேளை வராகசாமியின் பிள்ளையே சென்னையில் விழுந்திருந்து அதைக் குறித்து அவனுடைய வீட்டிற்கு ஏதாவது தந்திவந்து அப்படித் தந்தியில் வந்த விஷயத்தையே அவன் மனைவி அவனுக்கு ஆபீஸுக்கு டெலிபோனில் அனுப்பியிருக்கலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள். ஏனென்றால் வராகசாமியின் ஷட்டகனுக்கும் அபிராமன் என்றுதான் பெயர். ஆதலால் அபிராமன் தந்தியடித்திருக்கிறன் என்பதைக் குறிக்கவே செய்தியை அனுப்பியவன் அபிராமன் என்று டெலிபோனில் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் நிச்சயம் செய்தார்கள். எப்படியும் இதுவே நடந்த விஷயமாயிருந்தால் அவன்தான் ஏற்கனவேயே அகஸ்மாத்தாய் வீட்டிற்குப் போயிருக்கிருனே; இதற்குள் தானே விஷயத்தைத் தெரிந்துகொண்டிருப்பான் என்றும் தாங்கள் இதைக் குறித்துச் செய்யவேண்டியது இனி ஒன்றுமில்லையென்றும் ஒரு விதமாகத் தங்களைச் சமாதானப்படுத்திக் கொண்டு அவரவர் ஸ்தானத்திற்குப் போய் தங்கள் தங்கள் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

மாலை ஐந்து மணியாயிற்று. ஆபீஸில் வேலையை முடித்துக்கொண்டு எல்லோரும் வீட்டிற்குப் போகும் சமயம். கோபாலசாமியும் தன் கடையைக் கட்டிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். வழியில் ஒரு பழக்கடையில் நுழைந்து பழங்களை பேரம் பேசிக்கொண்டிருக்கையில் முகத்தில் ஒரு சிரிப்புடன் வராகசாமி அங்குவந்து சேர்ந்தான். அவனுடைய தோற்றத்திலிருந்து வீட்டில் அவனுக்குத் தந்தி மூலமாய் தாங்கள் ஆபீஸில் முடிவுகட்டியபடி தகவல் ஒன்றும் கிடைத்திருக்கவில்லை என்று அறிந்தான் கோபாலசாமி.

ஆகையால் இவ்விஷயத்தைக் குறித்து ஒன்றுமே பிரஸ்தாபிக்கக்கூட வேண்டியதில்லை யென்று இருந்துவிட்டான். ஆனால் வெறுமனே இருந்தானு வராகசாமி?

"நான் வந்தபிறகு ஏதாவது விசேஷமுண்டா ஆபீஸில்?" என்று கேட்டான் வீண் வம்பாக.

அதற்கப்புறம் எப்படி சும்மாயிருப்பது? கோபாலசாமி டெலிபோன் செய்தியைப் பற்றிய விபரங்களை எடுத்துக் கூறிக் கடைசியில் "இதில் ஏதோ கட்டாயம் தவறுதல் ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிடில் உன் பையன்தான் சென்னையிலிருக்கிருனே" என்று சொல்லி முடித்தான்.

இதைக் கேட்டதும் வராகசாமி சிறிது நேரம் யோசித்த வண்ணமா யிருந்தது கோபாலசாமிக்குச் சற்று ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"ஏன்? என்ன யோசிக்கிருய்?"

"இல்லை, இரண்டுநாளைக்கு முன் சென்னையிலிருந்து வந்த கடிதம் ஒன்றில் எங்காத்து அம்பி ஏதோ சைகிளிருந்து கீழே விழுந்ததாகவும் அதனுல் உண்டான காயத்தை ஆற்ற தலையில் கட்டுக்கட்டி யிருக்கிறதாகவும் எழுதியிருந்தது. அதில் தான் கட்டாயம் ஏதாவது கோளாறு ஏற்பட்டு அவர்கள் எனக்கு இந்தத் தந்தியை அடித்திருக்க வேண்டும். அது இங்கு விலாசம் தடுமாறி வேறு யார் கையிலேயோ அகப்பட்டு அவர்கள் எனக்குத் தகவல் டெலிபோனில் கொடுத்திருக்கிருர்கள். டெலிபோனில் பேசியதும் அபிராமன் என்கிருயே. பேசியவன் அபிராமன் தந்தியடித்திருக்கிருன் என்பதைத்தான் அபிராமன் பேசுவதாகச் சொல்லி யிருக்க வேண்டும்."

"எதற்கும் அநாவசியமாய்க் கவலைப்படாதே. வந்த சமாசாரம் உனக்குத்தானு, இல்லையா, என்பதே சரிவரத் தெரியவில்லை. இதற்குள் ஏன் அலட்டிக் கொள்கிருய்?"

"இல்லை, இல்லை, அதில் ஒரு சந்தேகமும் எனக்குத் தோன்றவில்லையப்பா. என் ஷட்டகன் அபிராமனே அடித்திருக்கையில் சந்தேகத்திற்கு வேறு இடமெங்கிருக்கிறது?"

"அதற்குள் பதருதே. வேண்டுமானுல் இங்கிருந்து பதில் தந்தி வரும்படி ஓர் அவசரத் தந்தி கொடுத்து விஷயம் உண்மைதானு என்று முதலில் தெரிந்து கொள். அதற்கப்புறம் மேற்கொண்ட காரியங்களைப் பற்றி யோசிக்கலாம்."

கோபாலசாமி இதைச் சொல்லி முடிப்பதற்குள் வாடிய முகத்துடன் வராகசாமி அவ்விடத்தை விட்டு அகன்றான்.

கடையை விட்டுச் சென்றவன் வீட்டிற்குச் சென்று சமாசாரத்தைத் தன் மனைவிக்குச் சொல்லி அவளுடன் கலந்து யோசித்து ஒரு தந்தியைக் கொடுத்து விடுவது என்று நிச்சயிப்பதற்குள் இரவு மணி ஏழரை ஆகிவிட்டது. அதற்கப்புறம் தந்தியாபீஸுக்குப் போய் ஒரு ரூபாய் ஒன்பது அணுக் கொடுத்து ஒரு அவசரத் தந்தியும் பதில் தந்திக்காக முன்பணமாக ஒன்பது அணுவுமாக மொத்தம் இரண்டு ரூபாய் இரண்டணு செலவில் ஒரு தந்தி கொடுத்துவிட்டு சோகமே உருவெடுத்தவனுய் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இரவு முழுவதும் வீட்டில் ஒரே அலங்கோலம். வராகசாமி புருஷனுகையால் தன் உணர்ச்சிகளை அதிகமாய் வெளிக்காட்டாமல் தலையில் கையை வைத்துக்கொண்டு ஒரே ஏக்கம் பிடித்தவனுய் உட்கார்ந்துவிட்டான். அவனருகில் அவனுடைய மனைவி கோமளம் தன் எண்ணங்களை வாய்விட்டலற்றிக் கொண்டிருந்தாள். என்ன விருந்தாலும் ஸ்திரீ ஜென்மமல்லவா? பெற்றமனம் பித்தென்பார்களே. பாவம், ஒரே ஒரு ஆண் குழந்தை. மற்ற இரண்டும் பெண் கட்டைகள் தானே? எல்லாம் நல்லபடியானுல் உப்பிலியப்பன் சன்னதியில் நூறு சூறைத் தேங்காய்கள் உடைப்பதாகவும் திருப்பதி வேங்கடாசலபதி ஸ்வாமி உண்டிக்கு பையன் கை நிறையக் காசு போடுவதாகவும் வேண்டிக் கொண்டாள். வராகசாமிக்கும் கோமளத்திற்கும் அன்றிரவு சிவராத்திரியாய் முடிந்தது.

* * *

மறுநாள் காலை 10 மணிக்கு ஆபீஸில் கோபாலசாமி உட்கார்ந்திருந்த இடத்தைச் சுற்றி அங்கு வேலை பார்த்துவந்த அத்தனை "மதருஸி"களும் கூட்டம் போட்டனர். வராகசாமி இன்னும் ஆபீஸுக்கு வரவில்லை. "பதில் தந்தியை எதிர்பார்த்துக் கொண்டு வீட்டில் தான் இருப்பான். தந்தி வந்ததும் வந்து விடுவான். பாவம்! என்ன சமாசாரம் கொண்டு வரப் போகிறுனே" என்று சொல்லிக் கொண்டு எல்லோரும் அவன் வரவை எதிர்பார்த்திருந்தனர்.

பின்னும் கால் மணி நேரத்திற்கெல்லாம் கையில் ஒரு தந்தியுடன் வராகசாமி அக்கூட்டத்தினிடையில் தோன்றினுன்.

தந்தியில்:—

"சாமா—(அதுதான் வராகசாமியின் பிள்ளையின் செல்லப் பெயர்)—சௌக்கியம் கவலை வேண்டாம்."

என்று கண்டிருந்தது. தந்தியைக் கண்டதும் எல்லோருடைய மனதிலிருந்தும் ஒரு பெரிய பளு நீங்கியது போலிருந்தது.

எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களுக்குப் போக விருந்த சமயத்தில் அந்தப் பிரிவில் வேலை செய்துவந்த ஓர் குமாஸ்தா ஒரு விண்ணப்பமும் கையுமாக கும்பிடு போட்டுக் கொண்டு மானேஜர் கோபாலசாமியிடம் வந்து நின்றுன். விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ளுவதற்காக வேண்டி கோபாலசாமியின் நண்பர்கள் வராகசாமி உட்பட, அங்கேயே சிறிது தங்கினர்.

"என்ன, அப்ரஹாம்? என்ன அது?" என்று சொல்லிக் கொண்டே விண்ணப்பத்தை வாசித்தான் கோபாலசாமி. அதில் அதற்கு முந்திய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு வழக்கம்போல் சிற்றுண்டிக்கு வீட்டுக்குப் போனவன் அங்கு தன்னுடைய குமாரன் மாடியிலிருந்து கீழே விழுந்து விட்ட படியால் அவனை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டி யிருந்ததென்றும், அதனுல் ஆபீஸுக்குத் திரும்பி வர முடியவில்லையென்றும், அதைக் குறித்து ஆஸ்பத்திரியிலிருந்தே தன்னுடைய நேர் மேலதிகாரியாகிய உதவி மானேஜர் வராகசாமிக்கு தான் டெலிபோனில் செய்தி அனுப்பி விட்டதாயும், தான் ஆபீஸுக்கு வராததற்குத் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தான்.

அதைப் படித்து முடித்ததும், "அட ராமா, உன் வேலைதானு இது? டெலிபோன் குமாஸ்தா செய்த ஒரு சிறு பிழை எவ்வளவு விபரீதத்திற் கொண்டு போய் விட்டு விட்டது!" என்று சொல்லிக் கொண்டே தன் நண்பர்களிடம் அவ்விண்ணப்பத்தைக் காண்பித்தான். எல்லோரும்

"கொல்"லென்று வயிறு குலுங்க நகைத்தனர்.

"அப்ரஹாம்" என்னும் கிறிஸ்தவப் பெயரை "அபிராமன்" என்று எழுதி இவ்வளவு அனர்த்தங்களுக்கும் காரணமாயிருந்த அந்த டெலிபோன் குமாஸ்தாவின்மேல் வராகசாமிக்குக் கோபம் வந்தது இயல்புதானே? ஆனல் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய சகாக்களின் சிரிப்பில் கலந்து கொண்டான்

அன்று மாலே வீட்டிற்குப் போய் நடந்ததை சாங்கோபசாங்கமாய் வராகசாமி கோமளத்தினிடம் உரைக்கவும் அவள், "எது, எப்படியோ. எல்லாம் நல்லபடியே நடந்தது சுவாமிகளின் கிருபைதான். என் பிரார்த்தனே யெல்லாம் செலுத்தூட்டு மறுவேலே பாருங்கோ" என்ருள்.

* * *

இக்கதையில் சம்பந்தப்பட்டவர்களின் லாப நஷ்டங்கள் என்னவென்பது இப்பொழுது உங்களுக்குத் தெரிந்ததா? தெரியாவிட்டால் இதோ பாருங்கள் அவைகளின் ஜாபிதாவை :—

(1) உதவி மானேஜர் வராகசாமிக்கும் அவன் மனைவி கோமளத்திற்கும்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| நஷ்டம் :—தந்திச் செலவு | 2—2—0 |
| பிரார்த்தனைச் சிலவுகள் | 24—8—0 |
| ஷை நிறைவேற்ற ரயில் சார்ஜ் | 30—0—0 |
| —ஓர் இரவு தூக்கம். | |

(2) திருப்பதி வேங்கடேச பெருமாள் கோவிலுக் கெதிரில் செல்லாத காசுகளை விற்கும் ஓர் வியாபாரிக்கு.

லாபம்:—பத்து வயதுள்ள சிறுவனுடைய இரண்டு கைகளையும் நிரப்பும் செல்லாக் காசுகளின் கிரயம் ரூ. 1—4—0.

(3) உப்பிலியப்பன் சன்னதிக்கருகிலுள்ள தேங்காய் வியாபாரிக்கு.

லாபம்:—நூறு தேங்காய்களின் மொத்தக் கிரயம் ஒரு கொசறுடன். ரூ. 3—4—0.

(4) டெலிபோன் குமாஸ்தாவுக்கு.

நஷ்டம்:—வராகசாமியின் முயற்சியால் சம்பளத்தில் நிறுத்தப்பட்டது மீ 1-க்கு ரூ. 5. வீதம் 3-மாதங்களுக்கு. ரூ. 15—0—0.

(5) ஆபீஸில் மானேஜர் கோபாலசாமிக்கும் அவனுடைய சகாக்களுக்கும்.

நஷ்டம்:—மர்மம் வெளியாவதற்கு முன் சிறிது மனக்லேசம்.

லாபம்:—மர்மம் வெளியான பின்பு பத்து நிமிஷம் வயிறு குலுங்கச் சிரித்தல்.

---


தொடர் கதை!

# "இல்லொளி"

"குகப்ரியை" எழுதிய புது நவீனம்

## பாரத மணியில்

பிப்ரவரி 12-ம் தேதியிலிருந்து வெளியாகிறது!

# வெறுப்பும் விருப்பும்

(ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார்)

இடம்
ஓர் நாட்டுப்புறத்து வீதி

காலம்
மாலை

(ராம பத்திரனும் பால பரதனும் வருகிறார்கள்.)

பாலன் : இந்த மிட்டா யார் வசத்தில் இருக்கிறது இப்பொழுது ?

ரா : குணலயர் என்பவர் வசம்.

பா : உங்கள் மிட்டாவுக்குப் பக்கத்து மிட்டாவல்லவா அது ? நீங்கள் இருவரும் சமாதானமாய் வாழ்கிறீர்களா ?

ரா : அதுதான் கிடையாது. இங்கு எங்கள் நடுவில் வந்து எங்கள் எல்லோரையும் கெடுப்பதை விட்டு நூறு மைலுக்கு அப்பால் அவர் வாழ்ந்து கொண்டிருந்தால் நலமாயிருக்கும்.

பா : அதைக் கேட்க எனக்கு வருத்தமாயிருக்கிறது-என்ன அவர் மீது குறை கூறுகிறீர் ?

ரா : ஒரு விஷயத்திலல்ல எல்லா விஷயத்திலும் தான்; எல்லா விஷயத்திலும் எங்களிருவருக்கும் சச்சரவு தான். தேசீய விஷயத்தில் அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவர். நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன். இது ஒன்றே போதும், நாங்கள் ஒற்றுமையாயிராமல் சண்டை போட்டுக்கொண்டு இருப்பதற்கு.

பா : அப்படி உறுதியாய் நான் எண்ணுவதற்கில்லை —இன்னுமென்ன ?

ரா : இந்த பக்ஷி மிருகங்கள் முதலியவைகளைப் பாதுகாக்க நாங்கள் ஒரு சங்கம் ஏற்படுத்தினால் அதில் அவர் சேரமாட்டேன் என்றார். இந்த ஊரிலுள்ள எந்தச் சபையிலும் அவர் அங்கத்தினராக வில்லை.

பா : அவரைக் கேட்டீர்களோ சேரும்படி?

ரா : நேராக யாராவது கேட்டார்களோ என்னவோ தெரியாது. அவராக சேர்ந்திருக்கக் கூடாதா என்ன—மனமிருந்தால்? அவர் குணமே ஒரு மாதிரி என்று நினைக்கிறேன். தனக்குத் தானாக இருக்கிறார். நான்கு பெயருடன் பேசுவதில்லை. அன்றியும் பரமலோபி யென்று நினைக்கிறேன்.

பா : அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது ?

ரா : பணம் அதிகமாயிருந்தும் அதற்குத் தக்கபடி வாழ்வைக் காணோம். அநேக விஷயங்களில் மிகவும் சிக்கனமாயிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.

பா : ஒரு வேளை தன் பணத்தை எல்லாம் தர்மம் செய்கிறாரோ என்னவோ ?

ரா : அவராவது, தர்மம் செய்வதாவது ! அதொன்றுமில்லை என்று கட்டாயமாய்ச் சொல்வேன். போன வாரம் ஒரு குடியானவன் வீடு தீப்பற்றி அவன் சொத்தெல்லாம் அழிந்தபோது அவன் எங்களிடமெல்லாம் ஏதோ தர்மம் வாங்கிக்கொண்டு அந்த ஜாப்தாவை அவரிடம் கொண்டுபோய்க் காட்டினான். அவர் அவனுக்குக் கொடுத்ததெல்லாம் " இதைப்பற்றி யோசிக்கிறேன் " என்ற பதில் தான்.

பா : அப்படி யோசித்தாவது ஏதாவது கொடுத்தாரா ?

ரா : அது எனக்குத் தெரியாது. ஏதோ இந்த சாக்கைச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார் என்பது என் அபிப்ராயம். அப்புறம், இவருக்கு முன் இருந்த மிட்டாதார் தன் தோட்டத்தில் அநேக புஷ்பச் செடிகளை வைத்திருந்தார். யாராவது பூஜைக்கு புஷ்பம் வேண்டுமென்றால் சும்மா கொடுப்பார். இவர் வந்த பிறகு அவைகளையெல்லாம் எடுத்துவிட்டு மருந்துச் செடிகளை வைத்திருக்கிறார்.

பா : அது அவ்வளவாகத் தப்பாகத் தோன்றவில்லை எனக்கு. ஒரு வேளை அந்த மூலிகைகளை எல்லாம் வியாதியஸ்தர்கள்

வேண்டினுல் கொடுத்து வருகிருரோ என்னவோ? அதில் என்ன தவறு?

ரா: அவர் தோட்டத்தை எப்படியாவது வைத்துக்கொள்ளட்டும். ஆயினும் ஜனங்களெல்லாம் அவரை மதிக்கச் செய்வதற்கு இது வழியல்ல. என் வரைக்கும் அவர் என்மீது துவேஷம் வைத்திருக்கிருர் என்று எண்ணவேண்டியவனுய் இருக்கிறேன்.

பா: அப்படியிருந்தால் அது மிகவும் தவறு தான்—நீர் இவ்வுலகில் ஒருவருக்கும் கெடுதி நினைப்பவர் அல்லவே. அப்படியிருக்கும்போது உம்மீது அவர் துவேஷம் பாராட்டுவானேன்—ஆயினும் உம் மீது அவர் துவேஷித்திருப்பதை எப்படி அறிந்தீர்கள்?

ரா: பல விஷயங்களில். அவருடைய குதிரைகளில் ஒன்றை விற்பதாகத் தெரிந்து அதை நான் அறிந்து அதற்கு ஒரு விலை கொடுத்து வாங்குவதாகக் கோரினவுடன் அதை வேறு நாட்டிற்கு அனுப்பிவிட்டார். என் பெண்சாதிக்கு புஷ்பச் செடிகளை வளர்ப்பதில் மிகவும் பிரியம். அவள் ஒரு முறை அவர் தோட்டத்தின் புறமாக வண்டியில் சென்றபோது ஏதோ ஒரு புது மாதிரியான புஷ்பச் செடியை அவர் தோட்டத்தில் கண்டு அதில் ஓர் கிளையை வாங்கிப் பதி போட விரும்பினுள். இந்த விருப்பத்தை என் தோட்டக்காரன் அந்த குணுலயர் வீட்டுத் தோட்டக்காரனுக்குத் தெரிவிக்க—இதைத் தெரிவிக்க எனக்கு இஷ்டமே இல்லை—அவர் தோட்டக்காரன் எஜமானனுக்கு இதைச் சொன்னுனும். இந்தப் பெரிய மனிதர் ஒரு சிறிய கிளையைக் கொடுக்க இஷ்டமில்லாமல் அந்தச் செடியை தொடவும் கூடாதென்று கட்டளையிட்டாராம்! சுருக்கிச் சொல்லுமிடத்து அந்தஸ்துடைய மனிதர்களுக்கு இருக்கவேண்டிய குணம் அவரிடம் ஒன்றுமில்லை. அவர் எப்படியாவது இவ்விடம் விட்டுப் போனுல் போதும் எனக்கு!

பா: வாஸ்தவமாய் நமக்கு அயலிலுள்ள மனிதன் கெட்டவனு யிருப்பதைப் போல் அவ்வளவு சங்கடமான சந்தர்ப்பம் வேருென்றும் கிடையாது. உங்களுக்கு அக்கதி வாய்த்ததே என்று எனக்கு வருத்தமாயிருக்கிறது.—இதோ யாரோ ஒரு மனிதன் உங்களுடன் பேச வருகிருப்போலிருக்கிறது.

ஒரு குடியானவன் வருகிருன்

ரா: ஓ! அவன்தான் வீடுபற்றி எறிந்த மனிதன்! வாடாப்பா, ரங்கா! எப்படியிருக்கிருய்? அந்த தர்ம ஜாப்தாவில் என்ன கிடைத்தது?

ர: எல்லாம் உங்கத் தயவு—என் நஷ்டமெல்லாம் சரியாய்ப் போச்சுதுங்க.

ரா: மிகவும் சந்தோஷம். நான் கடைசியில் அந்த ஜாப்தாவைப் பார்த்தபோது உனக்கு வேண்டிய பணத்தில் பாதி கூடச் சேரவில்லையே.

ர: ஆமாங்க! அப்போ நீங்க மிட்டாதார் கொணுலயர் என்ன கொடுத்தார்னு கேட்டது ஞாபகம் இருக்குங்களா? நானும் அப்பறம் யோசனெ பண்ணிச் சொல்றேன்னு சொன்ஞர்னு சொன்னேனே. அப்பாலே மறுநாள் எங்க சேரிக்கு வந்து என்னைப் பத்தியும் எனக்குவந்த நஷ்டத்தைப் பத்தியும் விசாரணைபண்ணுதாவ சொன்ணுங்க. கொஞ்சநாள் பொறுத்து நான் அவரைப் பாக்கப்போனப்போ "நான் விசாரணை பண்ணத்திலே நீ யோக்கியனின்னு தெரியுது. அக்கம் பக்கத்திலே இருந்தவங்களெலாம் ஒனக்காவ சிபார்சு பண்ணுங்க—அத்தொட்டு இன்னும் மத்தவங்ககிட்ட நீ கேட்க வேண்டியதில்லே." இண்ணு சொல்லி 50 ரூபாய் கொடுத்தாருங்க உடனே புண்ணியவான்! சாமி அவரை ரச்சிக்கணும்.

ரா: அம்பது ரூபாயா!

ர: ஆமாங்க! என் குடிசையெல்லாம் மறுபடியும் சரியாக் கட்டிக்கினே. இப்போ ஒரு வண்டிமாடு வாங்கப் போறேன்.

ரா: நல்ல தர்மம்! இப்படிச் செய்வாரென்று நினைக்கவில்லை, ரங்கா. உனக்கு நல்லகாலம் வந்ததைப் பார்க்க எனக்கு சந்தோஷம். உனக்கு செய்த உதவிக்

காக அவருக்கு நீ மிகவும் நன்றி பாராட்டவேண்டும்.

ர : ஆமாங்க. அவருக்கும் எனக்கு உதவி செய்த எல்லாருக்கும் கூட. சாமி உங்களையெல்லாம் காப்பாத்தணும். நான் வரேனுங்க.

(போகிறான்)

பா : மற்ற எந்தக் கெட்டகுணம் இருந்தாலும் அவரிடம் லோபத்துவம்இல்லை.

ரா : இல்லை, இதைப்பற்றி நான் எண்ணியது தவறுதான். அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆயினும் இப்படிப்பட்ட தயாளகுணமுடைய பெரிய மனிதர்கள் பெரிய விஷயங்களில் உதவுவதுபோல் அற்ப விஷயங்களிலும் தயாள குண முடையவராக இருந்து மற்றவர்களிடம் ஹிதமான நடவடிக்கை உடையவர்களாக இராதது வருத்தப் படத்தக்க விஷயம்.

பா : உண்மை. வாஸ்தவமாய் அப்படியிருந்தால் வருத்தப்படவேண்டிய விஷயம்தான்.

ரா : ஒரு குதிரைக்காகவோ அற்பச் செடிக்காகவோ கொஞ்சம் மரியாதை காட்டினால் என்ன கெட்டுப்போகிறது?

பா : இதோ பூச்செடிகளைப்பற்றிப் பேசும்போது உம்முடைய தோட்டக்காரன் பெரிய பூஞ்செடியை ஒரு தொட்டியில் கொண்டு வருகிறான்.

தோட்டக்காரன் வருகிறான்.

ரா : அடே, சாமி! என்னடாது தொட்டியில்?

சா : ஒரு பூஞ்செடிங்க. மிட்டாதாரு குணலயர் கொடுத்தாரு அம்மா கிட்டக் கொடுக்கச் சொல்லி.

ரா : உனக்கு எப்படிக் கிடைத்தது?

சா : அவர் தோட்டக்காரன் இத்தெக் கொடுக்கிறதுக்காக தங்கிட்ட என்னை வரச் சொன்னான். முன்னேயே இதெ நமக்குக் கொடுத்திருப்பாங்களாம். கொஞ்ச நாள் பொறுத்துத் தான் பூமிலேயிருந்து பேத்துக் கொடுக்கணும்னு சொல்லி கொஞ்சம் நாளாச்சாம்.

ரா : இன்னும் இது மாதிரி செடிகள் அநேகம் அவரிடம் இருக்கிறதல்லவா?

சா : இல்லிங்க. சின்ன நாத்துத் தான் இருந்துச்சு அவருக்கிட்ட. அம்மா இந்த செடி வேணும்னு இஷ்டப் பட்டாங் கண்ணு தெரிஞ்சு அவுங்களுக்கு இப்படிக் கொணம்னு தீர்மானிச்சாங்களாம். நல்ல செடிங்க இது. இத்தெப்போலே வேறெ ஆப்படறது கஷ்டம்.

ரா : நல்லது நீ போ.

(தோட்டக்காரன் போகிறான்.)

பா : மரியாதை மட்டாகக் காணுமே.

ரா : மிகவும் மரியாதை பாராட்டியிருக்கிறார். இது நான் மறுக்க முடியாது. இதற்காக வந்தனம் செலுத்தவேண்டும். ஒரு வேளை குதிரையை எனக்கு விற்கமாட்டேனென்றதற்காக இதை யாவது செய்யவேண்டுமென்று தோன்றினாற் போல் இருக்கிறது.

பா : இருக்கலாம்—ஆகையால் ஏதோ நல்ல சுபாவமுடையவராய்த் தான் தோன்றுகிறது.

ரா : ஆமாம்—ஆ! இதோ அவர் குதிரைக்காரன் வருகிறான். சந்தைக்குப் போய் திரும்பி வருகிறான் போலிருக்கிறது. அவனிடம் பேசிப் பார்க்கிறேன்.

குதிரைக்காரன் வருகிறான்.

ரா : தாமா! சந்தையிலே ஏதாவது குதிரை விற்கப் போயிருந்தாயா?

தா : ஆமாங்க.

ரா : நான் கேட்ட குதிரையை வித்துவிட்டாயா என்ன?

தா : ஆமாங்க சாமி.

ரா : நான் கேட்டதுக்கு மேலே எவ்வளவு கிடைத்தது? அதை எனக்கு விற்றிருக்கக்கூடாதா? அந்த விலையை நான் கொடுத்திருக்க மாட்டேனா?

தா : இல்லிங்க. அந்த குதிரை நீங்க சவாரி பண்ண லாயக்கில்லிங்க. இந்த சமாசாரம் எங்க ஐயாவுக்கு நல்லாத் தெரியும். அது ஒரு பெரிய சனி பிடிச்ச களுதைங்க. அத்தெ தேய்ச்சிக்கிணு இருந்த மாலிஸை இரண்டு தரம் கொல்லப் பாத்துதுங்க. அத்தொட்டு பாரம் ஏதாவது இழுக்க யாருக்காவது வந்த விலைக்கு வித்துப்பூடுன்னு எஜமான் சொன்னுங்க.

ரா : இதற்காகத் தானு குதிரையை எனக்கு விற்க மாட்டேனென்றுர் உங்க எஜமான் ?

தா : ஆமாங்க.

ரா : இந்த நன்றிக்காக நான் பாராட்டு கிறேன். (தாமன் போகிறுர்) அந்த மட்டும் எனக்கு நல்ல உதவி செய்தார்.

பா : உதவி மாத்திரமல்ல. உங்கள் உயிரையும் காப்பாற்றினுர்.

ரா : ஆம்; இனிமேல் அவசரப்பட்டு மற்றவர்கள் குணத்தைப்பற்றி தீர்மானம் செய்யலாகாது என்னும் புத்திமதியைக் கற்றேன். இங்கே பாருங்கள், நம்முடைய நாட்டிலே இந்தக் கட்சிபேதம் என்பது ஒன்று வந்து நல்ல சுபாவமுடைய மனிதர்களே அதன் வலைக்குட் சிக்கச்செய்து, அதனின்று விடுவித்துக் கொள்வது கஷ்டமாயிருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் பாராட்டவேண்டிய பக்ஷத்தையும் பாழாக்குகிறது. அதோ இந்தக் கெட்ட குணத்தினுல் கஷ்ட திசை அடைந்த ஒருவர் வருகிறுர் பாருங்கள்.

பா : யாரவர் ?

ரா : பக்கத்து ஊர் சந்தையண்டை ஓர் பள்ளிக்கூடம் வைத்து வாழ்ந்துகொண்டிருந்த எளிய உபாத்தியாயர். சென்ற கிராமத் தேர்தலில் எங்கள் பக்கம் உழைத்ததால் அவரது பள்ளிக்கூடப் பிள்ளைகளே யெல்லாம் இழந்தார். அவருக்கு ஏதாவது உதவிபுரிய வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது. நிரம்ப யோக்கியர். கொஞ்சம் வாய்மாத்திரம் நிகளம்.

உபாத்தியாயர் வருகிறுர்

ரா . வாரும், வாரும், க்ஷேமந்தானு ?

உ : நமஸ்காரம். நிரம்பக் கஷ்டம் அனுபவித்தேன். ஆயினும் அவைகளெல்லாம் சீக்கிரம் தொலையும் காலம்வந்தது.

ரா : சந்தோஷம். அதெப்படி ?

உ : தோகையூர் பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை காலியாயிருக்கிறதாம். அது எனக்குக் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

ரா : அப்படியா ! அப்பள்ளிக்கூடம் நமது எதிர்க்கட்சியைச் சேர்ந்ததல்லவா ?

உ : அப்படித்தான் ஐயா ! இருந்தாலும் குணலயர் அந்த வேலைக்குச் சிபார்சு செய்தார். அதனுல் அந்த வேலை எனக்குக் கிடைக்குமென்று நினைக்கிறேன்.

ரா : குணலயரா ? என்ன ஆச்சரியம்.

உ : எனக்கும் ஆச்சர்யம்தான். அவர் ஒருநாள் என்னைத் தானுக வரவழைத்தார். ஏதோ பேதமான அபிப்ராயம் கொண்டதற்காக ஒருவன் ஜீவனத்தை இழப்பது மிகவும் தவறென்றும் அதற்காகத் தான் வருத்தப்படுவதாயும் வேறு ஒரு இடத்தில் எனக்கு ஏதாவது வேலைபார்த்துக்கொடுப்பதாகவும் சொன்னுர். பிறகு தோகையூரில் உபாத்தியாயர் வேலை காலியாயிருப்பதாகக் கூறி என்னை அந்த ஊர் தர்ம பரிபாலன சபையாருக்கும் சிபார்சு செய்வதாகச் சொன்னுர்.

ரா : உம்முடன் சாதாரணமாகப் பேசினுரா அவர் ?

உ : மிகவும் அன்னியோன்யமாகப்பேசினுர். நம்முடைய நாட்டின் கட்சி பேதங்களைப்பற்றி நெடுநாழி பேசினேம். இந்தக்கட்சி பேதத்தால் நல்ல உத்தமர்கள் பிரிக்கப்பட்டிருக்கிறுர்களே என்று வருத்தப்பட்டார். அச்சமயம் உங்கள் பெயரை எடுத்துப்பேசினேன். அவர் உங்களை நேரில் பரிசியம் இல்லை என்றும், ஆயினும் உங்கள் நற்குணத்திற்காக மிகவும் கௌரவம் பாராட்டுவதாகவும், ஏதாவது சமயம் வாய்த்தால் உங்களுடன் அறிமுகம் ஆகி சிநேகிதராக வேண்டுமென்று விரும்புவதாகவும் கூறினுர்.

ரா : சரி. நீங்கள் போய் வாருங்கள்.

(உபாத்தியாயர் போகிறுர்)

ரா : (கொஞ்சம் மௌனமாயிருந்து)வாருங்களய்யா நாம் போவோம்.

பா : எங்கே ?

ரா : உங்களுக்கு இதைப்பற்றிச் சந்தேகமா ? நேரோ குணலயர் வீட்டுக்கு. இவ்வளவு தூரம் கேட்டறிந்தபின் நான் இதுவரை அவர்மீது தவருக அபிப்ராயப்பட்டதற்காக அவர் மன்னிப்பைக் கேட்காமல் இருக்கலாமா ?

(இருவரும் போகிறுர்கள்)

# சிறு குடிசை

(ஸ்ரீ எஸ். பிச்சையா)

காலை நேரம். எனக்குச் சோம்பலாக இருந்தது. நண்பர் வீட்டிற்குப் போய் அவரோடு பேசிக்கொண்டு நேரத்தைக் கழிக்கலாம் என்று எண்ணிப் புறப்பட்டேன். இரண்டு தெருக்களைத் தாண்டினால் அவரது வீடு.

வழியில் ஒரு சிறு குடிசை இருந்தது. எத்தனையோ முறைகள் அவ்வழியாகப் போயிருக்கிறேன்; ஆனால் அதை நான் கவனித்ததே இல்லை.

குடிசையின் கூரை பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. அதன்மேல் படர் கொடிகள் பின்னிக் கிடந்தன. அவற்றிலுள்ள காய்கறிகள் கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கிடந்தன; சில கூரையிலேயே உறங்கின. குடைகள் பிடித்தன போல் உயர்ந்த தென்னை மரங்கள் கூரையில் நிழல் படும்படி சாய்ந்து நின்றன. மனசுக்குப் பிடித்த இடம்.

குடிசைப் பக்கம் வந்ததும் இனிய குரலில் யாரோ பாடுவது காதில் விழுந்தது. சற்று நின்று கேட்டேன்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப் போரை
நிந்தனை செய்வோம்."

குடிசைக்குள்ளிருந்து தான் ஒரு பெண் பாடுகிறாள் என்று உறுதியாயிற்று. திண்ணையருகில் போய் நின்றேன். "ஐயா, உள்ளே வரவேண்டும். வெளியே வெயிலில் நிற்கிறீர்களே" என்று உள்ளே இருந்த ஒரு பெரியவர் என்னைக் கூப்பிட்டார். போனேன். பாய் விரித்து உட்காரச் சொன்னார். உட்கார்ந்தேன். வெற்றிலை பாக்கு கொண்டுவந்து தந்தார். போட்டுக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தேன். அடடா, நான் கண்ட அதிசயத்தை என்னவென்று சொல்ல!

என்னை அவர் அறிந்திருக்கிறார். ஆனால், நான் அவரை இதற்கு முன் பார்த்ததே இல்லை; தெரியவே தெரியாது. சிலர் தாம் வாழும் கிராமத்தில் வாழும் அனைவரையும் அறிந்திருப்பார்கள். இன்னும் சிலர் அடுத்த வீட்டில் வசிப்பவர்கள் யார் என்று கூடத் தெரியாமல் இருக்கிறார்கள். அதில் நான் ஒருவன்.

என்னிடம் பேசிக்கொண்டே அப்பெரியவர் மறுபடியும் துணி நெய்ய ஆரம்பித்தார். அவரது தாயார் திருவெட்டம் சுற்றிக்கொண் டிருக்கிறாள். தன் மகனுடன் வாழ்ந்தாலும் பாடுபட்டு உண்ணுகிறாள்! இவ்வளவிற்கும், தள்ளாத வயது! மனைவி ராட்டினம் உருட்டிக் கொண்டிருக்கிறாள். அவரது நான்கு பிள்ளைகள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். இந்தச் சிறிய தொழிற்சாலை என் மனசுக்குப் பெரிய இன்பம் அளித்தது.

"பையன்கள் என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டேன். பிள்ளைகளைப் பார்த்துச் சிரித்தார். பிறகு பதில் சொன்னார்:

"பிரம்புக் கூடை செய்கிறார்கள். மூங்கிலிலும் கூடை செய்யத் தெரியும். நெசவுத் தொழிலும் தெரியும். மூத்தவன் பின்பக்கம் போயிருக்கிறான். கந்தன், அவன் பெயர். சமுசாரித் தொழில் மிக நன்றாய்த் தெரியும் அவனுக்கு. அதோ இருக்கிறானே, அவன்தான் இளைய பையன். பெயர் சுப்பையா. எட்டாவது வாசிக்கிறான். பள்ளிக்கூடம் இல்லா வேளைகளில் அவனும் ஏதாவது சாமான்களை ஆக்குவான். சித்திரம் வரைவதில் சமர்த்தன். இரண்டு பெண்களுக்கும் பொம்மை, கிலுக்கு, உறி, கிளிக் கூண்டு, யாத்திரைப்பை, கட்டுப்பெட்டி முதலியன செய்ய நன்றாய்த் தெரியும். மூத்த பெண் சமையல் செய்வதில் சமர்த்தி. இளைய பெண் இருக்கிறாளே—யமன்தான்; அதோ தொங்குகிறதே கிளிக்கூண்டு, அது அவள் செய்தது தான். மற்றப்படி, பாட்டோ, படிப்போ, ஆட்டமோ, எதிலும் வல்லவள். வீட்டுவேலையில் பம்பரந்தான்" என்று சொல்லி முடித்ததும் அவளைப்

பார்த்துச் சிரித்தார். அவள் திரும்பிப் பார்த்தாள். மின்னல் போல் அவள் கண் ஒளி என் முகத்தில் பட்டு மறைந்தது.

அவர் பேசும் விதம், கொண்ட அன்பு, செய்யும் உபசாரம் முதலியன எல்லாம் வியக்கச் செய்தன. "இதுவரை இவர் களை அறியாமல் இருந்தேனே" என மனம் வருந்தினேன்.

நிமிர்ந்து பெரியவர் முகத்தைப் பார்க் கையில் அவருக்குப் பின்னால் நிறைய புத்தகங்கள் இருந்தன.

"என்ன வெல்லாமோ புத்தகங்கள் இருக்கின்றனவே அவை என்ன?" என்று பணிவாகக் கேட்டேன்.

"கோமதி! இங்கே வா அம்மா. அந் தப் புத்தகங்களை எடுத்து அவரிடம் கொடு. பார்க்கட்டும்" என்று சொன்னார் அப்பெரியவர்.

"அங்கேயே இருக்கட்டும். அவைகளை வாசிப்பது யார்?" என்று கேட்டேன். ஆச்சரியத்தோடுதான் கேட்டேன். "என் பிள்ளைகள் எல்லோருக்குமே வாசிக்கத் தெரியும். நானும் ஓய்ந்த வேளைகளில் படிப்பேன். இப்பொழுது எனக்குக் கண்பார்வை போதாது. வயசு ஆகி விட்டதே. பிள்ளைகளை வாசிக்கச்சொல்லி, கேட்டுக்கொண்டிருப்பேன்" என்று அவர் சொல்லி முடித்துப் புன்முறுவல் கொண் டார்.

இதற்குள், சங்கு வளையல்களைச் சூடிய இரு கைகள் என்முன் புத்தகங்களை கொண்டு வைத்தன. என்ன அருமையான புத்தகங்கள்! திருக்குறள், சிலப்பதி காரம், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், பாரதி நூல்கள். ஆ! எவ்வளவு அருமையான புத்தகங்கள் அந்தக் குடிசையில்!

இவைகளில் ஒரு புத்தகங்கள்கூட என் னிடம் இல்லையே. திருக்குறள் இல்லாத வீடு ஒரு வீடா? பாரதியார் பாடல்கள் ஒன்றுகூட மனப்பாடம் இல்லையே எனக்கு! என்ன பிறவி, என்ன படிப்பு?

என்னையே நொந்துகொண்டு இருந் தேன். என் மன நிலையை அவர் என்ன கண்டார்?

"ஐயா, புழுக்கமாக இருக்கிறதா? விசிறி தரட்டுமா? இல்லாவிடில் தோட் டத்திற்கு வாருங்கள். நல்ல காற்று வீசும். பையனும் கீரைப்பாத்தியில் தான் நிற்கி ருன்" என்று சொல்லி என்னை அழைத் துச் சென்றார். நானும் பின்னால் சென் றேன். அத்தகைய பெரியவர்களைப் பின்பற் றிச் செல்லுவது இழிவா? இல்லை யில்லை.

தோட்டத்தின் அருமையைக் கண்ட தும் மனம் வேறுபட்டது. நான் ஒரு கவிஞனாக இருந்தால் உடனே பாட ஆரம் பித்திருப்பேன். பாட்டின் சுவை அறி யாத எனக்கு எப்படிக் கவி வரும்?

தென்னந்தோப்பு. பக்கத்தில் வாழைத் தோட்டம். வரப்புகளில் சேனை, சேப்பு, வள்ளி, கருணை முதலிய கிழங்குகள் பயி ரிடப்பட்டிருந்தன. அதை அடுத்துக் கீரைப்பாத்திகள். அவைகள் ஒரு குடும் பத்தைக் காப்பாற்றுமே! ஒரு பக்கத்தில் மருந்துச் செடிகள்; கண்டங்கத்திரி, தூது வளை, மணத்தக்காளி, துளசி, சிறிய நங்கை, பெரிய நங்கை இன்னும் என்ன வெல்லாமோ மருந்துச் செடிகள் நிறையப் பயரிடப்பட்டிருந்தன. எவ்வளவு பரோப கார எண்ணம்!

பாத்திகளுக்குத் தண்ணீர் பாய்ச்சி விட்டு அவரது மகன் வந்தான். எவ்வளவு மரியாதை! எவ்வளவு ஆரோக்கியமான தேகம்! அவனது உருவத்தைக் கண்டால் எந்தச் சிற்பியும் தனது கைத்திறனைக் காட்டி சிலையில் அமைக்க விரும்புவான். எந்த மழைக்கும் வெயிலுக்கும் அஞ்சாத குன்றுபோன்ற உடல்! சோம்பல் கண் டால் ஓடியே போய்விடும்.

"நேரமாகிவிட்டது. நான் வீட்டிற்குப் போகிறேன். என்னைக் காணுமல் குழந்தை அழ ஆரம்பித்துவிடும். இன்னொருநாள் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டேன்.

திரும்பும்பொழுது ஒரு கூடையில் காய்கறிகள் தந்தார். "என்னத்திற்கு? வேண்டாம். நீங்கள் எல்லோரும் நன் ருய்ச் சாப்பிட்டுச் சுகமாக இருங்கள்" என்று சொன்னதும் பெரியவரது முகம் வாடிவிட்டது. மறுக்காமல் வாங்கிக் கொண்டேன்.

வாசலைத் தாண்டியதும், மறுபடியும் பாடத் தொடங்கிவிட்டாள் அவள். தெருக்கோடிக்குச் செல்லும்வரை என் காதில் விழுந்தது பாட்டு. அதுவா சிறு குடிசை!

# புத்தகவிமர்சனம்

## சென்னை கார்ப்பொரேஷன்

சரித்திரம். (ஆசிரியர்: ஸ்ரீ ஏ. கே. சந்திரசேகரன். பிரசுராலயம்: விமோசனம் கம்பெனி, 155, தம்புச்செட்டித் தெரு, சென்னை. விலை ஒரு அணு)

சென்னை கார்ப்பொரேஷனைப் பற்றிய சகல விபரங்களையும் புள்ளி விபரங்களுடன் கோர்த்து வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீமான் சந்திரசேகரன் சென்னைப் பட்டணத்தின் பூர்வோத்திரம், ஜனத்தொகை, விஸ்தீரணம், நகரப்பிரிவினை, கார்ப்பொரேஷன் வரவு செலவு, தேர்தல், கமிட்டிகள், வேலைகள்—முதலிய எல்லா விஷயங்களைப் பற்றியும் ரஸமான நடையில் கூறியிருக்கிறார். எல்லோரும் வாங்கும்படி புத்தகம் விலையை ஒரு அணுவாக வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ. ராமன் மேனன் சரித்திரம் (ஸ்ரீ. ஏ. கே. சந்திரசேகரன். பிரசுராலயம்: ஸ்பார்ட்டன் கம்பெனி, 156, பிராட்வே. விலை அணு 2)

காலஞ்சென்ற மந்திரி கனம் ராமன் மேனன் அவர்களின் பிறப்பு வரலாற்றை ஆசிரியர் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர் கல்விகற்றுத் தொழிலில் அமர்ந்து கடைசியில் இறக்கும்வரை அத்தியாயங்கள் எல்லாம் உருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. ராமன் மேனன் வாழ்க்கை ஓர் தியாகியின் வாழ்க்கை. நாட்டிற்காக எல்லாவற்றையும் துறந்து சிறைசென்று மலையாளத்தில் காங்கிரஸின் வெற்றிக்கொடி நாட்டிய பெருமை அவருடையது. தேக சுகத்தைக்கூடக் கவனியாமல் அவர்செய்த சேவை ஒவ்வொரு வாலிபன் உள்ளத்தையும் தட்டி எழுப்பு மென்பதில் சந்தேகமில்லை.

## ஹரிஜனசேவை

(ஸ்ரீ. ஏ. கே. சந்திரசேகரன்)

ஹரிஜனப் பிரசாரத்திற்கு மிகவும் உபயோகமான சிறு புத்தகம். காங்கிரஸ் ஹரிஜனங்களுக்குச் செய்த உதவிகளை விவரமாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர். முக்கியமாக, காங்கிரஸ் மந்திரிகள் ஹரிஜனங்களுக்குச் செய்த உதவிகளை நன்றாக ஆராய்ந்து புள்ளி விபரங்களுடன் கூறியிருப்பது மிகவும் உபயோகமானது. சிறுபான்மையோர் பிரச்னை எழுப்பப்படும் இக்காலத்தில் இம்மாதிரியான புஸ்தகங்கள் எல்லோரது கண்களையும் திறப்பதல்லாமல் வகுப்புவாத விஷமிகளுக்குத் தக்க பதிலாக இருக்கும்.


## தமிழ் நேசன் ஆண்டுமலர்

கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் தமிழ் தினசரி "தமிழ் நேசன்" 1938-ம் வருஷ ஆண்டு மலர் கிடைக்கப் பெற்றோம்.

கண்ணைக் கவரும் படங்களுடனும், கட்டுரைகள், கதைகளுடன் திகழ்கிறது இப்புஸ்தகம். ஏசுநாதர் பிறப்பு, தமிழ்நாட்டு நடிகைகளின் மூவர்ணப் படங்கள், இன்னும் தமிழருக்கு சந்தோஷத்தை அளிக்கக்கூடிய படங்களெல்லாம் இருக்கின்றன.

தமிழ்த் தாத்தாலாடு லட்டுவைத் தின்ற சுப்பையரின் கதையை ஸ்வாரஸ்யமாகச் சொல்லுகிறார். அப்புறம், 'கல்கி' 'சேலத்தில் மதுவிலக்குச் சட்டம் ஆரம்பமான போது ஜில்லா வாசிகள் அதைக் கொண்டாட்டத்துடன் வரவேற்ற விதம், காங்கிரஸ் விரோதிப் பத்திரிகைகள் கையாளும் கேவல முறை இவைகளைப்' பற்றிச்சொல்லுகிறார். ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், ஸ்ரீ. சங்கு சுப்ரமண்யன், எப். ஜி. நடேசய்யர், ஜி. கே. சேஷகிரி முதலிய கலா ரஸிகர்கள் மலரை அலங்கரித்திருக்கிறார்கள். இன்னும், ஸ்ரீமான்கள் பெ. நா. அப்புஸ்வாமி, பெ. கோ. சுந்தரராஜன், கி. வா. ஜகன்னாதன், ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் முதலிய பிரபல எழுத்தாளர்கள் மலரை மணமிக்கதாகச் செய்திருக்கிறார்கள்.

இவ்வளவு தூரம் பெருமுயற்சி செய்து சிறந்த கலைஞர்களைக் கொண்டு எழுத்தாளர்களைக் கொண்டும் அமைக்கப்பட்ட இந்த மலரை கலைமகள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வாள் என்பதில் சந்தேகமில்லை.




# இலையுதிர் சாபம்

("கேஸரி")

ஒரே ஒரு ஊரில் ஒரு பெரிய தோப்பு ஒன்று இருந்தது. அதற்குத் தட்டான் தோப்பு என்றுபெயர். ஏனென்றால் அங்கே எப்பொழுது பார்த்தாலும் தட்டான் குருவி "டாங் டாங்" என்று கத்திக்கொண்டே இருக்குமாம். அந்தத் தோப்பில் பல வகையான மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவற்றில் புங்க மரம், நுணாமரம், வாதநாராயண மரம், அரசமரம், பூவரச மரம், நெல்லி மரம், பலா மரம், புளிய மரம், சீக்காய் மரம், இலுப்பை மரம் இவைகள் தான் ஜாஸ்தி. இவை மற்ற மரங்களின் பிரதிநிதிகள்போல் இருந்து வந்தன. அவற்றுள் ஏதாவது சண்டையோ சச்சரவோ வந்தால் அதைத் தீர்ப்பதற்கு, மேற்கூறிய மரங்களின் கூட்டம் ஒன்று கூடுவது பழக்கம்.

வெகுநாள் வரையில் எந்த விஷயத்திலும் அபிப்பிராய பேதமும் இல்லாமல் அவை ஒற்றுமையாகவே இருந்தன.

ஒருநாள் அவற்றின் ஒற்றுமை அழியக் காரணம் நேர்ந்தது. அவ்வூருக்கு ஏகபோக பாத்தியதையுள்ள சிற்றரசன் சேடை நிலங்களுக்குத் தழை போடுவதற்காக அந்தத்தோப்பிலிருக்கும் மரங்களின் தழையை முழுக்கக் கழிக்கும்படி ஆட்களுக்கு உத்தரவிட்டான். அவ்வளவுதான். ஐயோ! பாவம்! புங்கமரம், நுணாமரம், பூவரசமரம் முதலிய மரங்கள்தான் தழைகொடுக்கும் மரங்கள். அவற்றின் தலைகள் எல்லாம் மொட்டையாயின. தழை கொடுக்காத பலாமரம், புளியமரம், சீக்காய்மரம் முதலியவை தழை கழிக்கப்பட்ட மரங்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துப் பரிகாசம் செய்தன. இதுதான், அவற்றுள் பிளவு ஏற்பட்டதற்குக் காரணம்.

உடனே தழை கழிக்கப்பட்ட மரங்கள் எல்லாம் சபை கூட்டி யோசித்தன. அந்தக் கூட்டத்தில் பூவரசமரம் தலைமை வகித்தது. பிரும்மாவிடம் தங்கள் துர்ப்பாக்கியத்தைப்பற்றிக் குறைகூற நிச்சயித்தன. உடனே பிரும்மாவைக் குறித்துஒரு கடுந்தவம்புரிய ஆரம்பித்தன. அவற்றின் கால்களில் புற்றுக்கூட உண்டாகிவிட்டது. ஆனால் அவற்றின் தவம் முடியவில்லை. கடைசியாக அவற்றின் தவத்தைமெச்சி பிரும்மா பிரத்தியக்ஷமானார்.

"அப்பா பூவரசம், எழுந்திரு உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் பிரும்மா.

"ஸ்வாமி... எங்கள் தழையை எடுத்துக்கொண்டு எங்கள் அழகைக் குலைக்கிறார்கள் ஜனங்கள். அதனால் மறுபடியும் நாங்கள் துளிர்விட்டு இலைகள் வளர்த்துவதற்குள் எங்களைப் பார்த்து தழை கழிக்காத மரங்கள் "குரூபிகள்" என்று கேலி செய்கின்றன, இதைத் தாங்கள் நிறுத்த வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே ஸாஷ்டாங்கமாக பிரும்மாவை நமஸ்கரித்தது பூவரசம்.

"அப்பா, நீ சொல்வது வாஸ்தவம் தான். ஆனால் உன் தழையை எடுத்துக்கொள்ளும்படி நான் மனிதர்களுக்கு ஒரு நிரந்தரமான உத்தரவளித்து விட்டேனே. இப்போது என் வாக்கை மீற முடியாதே," என்று திகைத்து நின்றார் பிரும்மா.

"அப்படியில்லாமல் போனால், எங்களைப் பார்த்துச் சிரிக்கும் துஷ்டர்கள் கர்வத்தையாவது அடக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் தவத்தைவிட மாட்டோம்" என்று விறைத்துக் கொண்டு கோபத்துடன் சொல்லிற்று பூவரசம்.

"சரி அப்படியே செய்கிறேன். அந்த மரங்களையும் வருஷத்தில் சிறிது காலம் இலைகளை இழக்கும்படிச் செய்கிறேன்.

(528-ம் பக்கம் பார்க்க)




## வேலையில்லாத் திண்டாட்டம்

படித்தவர்களது வேலையில்லாத் திண்டாட்டம் இந்தியாவில் மட்டுமல்லாமல் எல்லாத் தேசங்களிலும் இருக்கிறது. உபயோகமான வேலை அகப்படாமல் வாழ்நாளைக் கழிக்கும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளின் துக்கமான நிலைமையும், அவர்களுக்காக வேண்டி எல்லாவற்றையும் தியாகம் செய்த பெற்றோர்களின் துன்ப நிலையும் இப்போது உலகில் சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. இவ்விஷயங்களைத் தெளிவாகப்பார்க்கவேண்டுமானால், மற்ற நாடுகளில் இவைபோன்ற நிலைமையையும் அந்நிலைமை உண்டான காரணத்தையும் ஆராய்தல் நல்லது. தற்கால வறுமை ஒழிய வேண்டுமானால் **பழைய சமூக முறை** ஒழிந்து, சமூக நியாயத்தைக் கொடுக்கக்கூடிய புதிய கொள்கைகள் வேர் ஊன்ற வேண்டும் என்பதில் என்ன தவறு இருக்கிறது? இப்போதுள்ள வறுமையையும், கஷ்டங்களையும், தீர்மானமான, சுயநலமற்ற, நன்றாக நிறுவப்படும் முற்போக்கான திட்டங்களால் களையலாம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் புத்துயிர் கொடுக்கும் முன்னேற்றத் திட்டங்களை, வாழ்க்கையில் தோற்றுப்போன, சமூகத்தின் பேரில் தீராக் கோபம் கொண்ட அதிருப்தி கொண்ட வாலிபர்கள் கைகளில் ஒப்புவிக்கலாமா? சீர்திருத்தங்களைக் கஷ்டப்படுபவர்கள் கையில் ஒப்புவிக்கக்கூடாது. நிதான புத்தியும் அறிவும் உள்ளவர்கள் வசம் ஒப்புவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தீமை எதிர்த்துச் செய்யும் போரில் சுயநலத்திற்கும் தீவிர உணர்ச்சிகளுக்கும் இறையாகமாட்டார்கள். புரட்சியில் சேருபவர்களில் பெரும்பாலோர் வேலையற்ற சர்வகலாசாலைப் பட்டதாரிகள்தான் என்பதை தீர்மானமாக சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். டாக்டர் ஷேய்ரர் என்ற ஜெர்மனி அறிவாளி, வேலையில்லாத ஆயிரக்கணக்கான வாலிபர்களைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டு பின்வருமாறு தீர்க்கத் தரிசனம் செய்தார். "எப்போது வாலிபர்களுக்கு தங்களுக்குரிய வழியில் வேலைகிடைக்காமல் போகிறதோ அப்போது அவர்கள்சக்தி, வேலைசெய்து வாழ உரிமை அளிக்கும் புரட்சி திட்டத்தைக் கொண்ட அரசியல் வேலைகளில், திரும்பிவிடுகிறது" என்றார். ஆகவே, எல்லோருக்கும் வேலை கொடுக்கக்கூடிய 'புதிய ஜெர்மனி'க்காக போராட ஹிட்லரின் கீழ் 50,000 வேலையில்லாப் பட்டதாரிகள் சேர்ந்ததில் ஆச்சர்யமில்லையல்லவா? இதில் ஆச்சர்யமில்லை. **சமூகம் இப்பட்டதாரிகளை விரும்பாதபோது இப்பட்டதாரிகளுக்கு எப்படி சமூகத்தின்பேரில் நம்பிக்கை உண்டாகும்?** திருப்தி, அந்தஸ்தும் கிடைக்காவிட்டால் போகட்டும். வாழ உரிமைகூடக் கிடைக்கவில்லையென்றால்? ஜெர்மனியில் மட்டுமல்ல; எல்லா தேசங்களிலும் வாலிபப்பட்டதாரிகள் பழைய அரசாங்கத்தை நிர்மூலக்க எழுந்த இயக்கங்களில் முன்னணியில் நின்றார்கள். ஆகையால், பொருளாதார சமூக வேறுபாடுகளைப் போக்க முயல வேண்டுமென்று நான் சுட்டிக் காட்டுகிறேன்."

**—ஸர். எம். வேங்கடசுப்பராவ்**

சமஸ்தானாதிபதிகள் தலைமை அதிகாரத்துக்கு (Paramount Power) சில கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தற்போது சட்டப்படி அவர்கள் சுயேச்சையான அரசர்களாயிருப்பதால் இந்தக் கடைமைகளை தடையன்னியில் செய்ய முடிகிறது. சமஸ்தானத்தில் பூரணமான பொறுப்பாட்சி ஏற்பட்டால் மன்னர் அரசாங்கத்தில் தனக்குள்ள பொறுப்பை நீக்கிக்கொண்டுவிட்டார் என்று அர்த்தம். ஆனால் தலைமை அதிகாரத்துக்கு கடமையைச் செய்வதில் அவருக்குள்ள பொறுப்பு மட்டும் இருக்கிறது. அந்தக் கடமைகளை மந்திரிகள் உணர்ந்து செய்தால்களானால் கஷ்டங்கள் ஏற்படாது. ஆனால் அவர்கள் செய்யாமலும் இருக்கலாம்.

இதிலிருந்து கிளம்பும் பிரச்னைகள் இரண்டு. முதலாவதாக, மன்னர் சம்பந்தப்பட்டவரை, பொறுப்பாட்சி அளிக்கும்போது, தலைமை அதிகாரத்திற்குத் தன் கடைமையைச் செய்யும் விஷயத்தில் மட்டும் முடிவான பொறுப்பை அவரே வைத்துக்கொள்ளவேண்டியவரா

கிறார். இந்த விஷயத்தில் சமஸ்தானங்களில் ஏற்படும் பொறுப்பாட்சி பூரணமானதல்ல. இரண்டாவதாக, இந்தச் சிக்கல் தீரவேண்டுமென்றால், திருவாங்கூர் திவான் சமீபத்தில் எடுத்துக் காட்டியதுபோல, தலைமை அதிகாரமும் சமஸ்தானாதிபதிகளும் ஒருமித்து. தங்களுக்குள்ள ஏற்பாட்டை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். தலைமை அதிகாரம் இந்திய சமஸ்தானத்தின் பிரதம மந்திரியோடு சம்பந்தம் வைத்துக்கொண்டு சமஸ்தானிபதிகளை (இங்கிலாந்து மன்னர்போல) சட்ட பூர்வமான அரசர்கள்போல் நடத்தலாம்.

—டாக்டர் அப்பாத்துரை

## ஐரோப்பிய நாகரீகம்

ஐரோப்பிய நாகரீகம் தீர்க்கவேண்டிய பிரச்னை என்ன ? கட்சிக்காரர்களிட மிருக்கும் அதிகாரத்தை சர்வதேச சட்டத்திற்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய வழியைக் கண்டு பிடிப்பதுதான். 'இனிமேல் சண்டை கூடாது' என்பதுதான் அந்தச் சட்டம்.

இந்தக் கொள்கை மிகவும் விளங்கக்கூடியது. இலகுவானது. அமுலுக்குக் கொண்டு வரும்போதுதான் சிரமம் எல்லாம். இப்போது உள்ளகுழப்பம் நாகரீகத்தை நாசமாக்காமல்இருக்க வேண்டுமென்றால்செய்யத்தான் வேண்டும். இது எவ்வளவு சிரமமான போதிலும்பொதுஜன அபிப்ராயம் வலுவடைந்திருந்தால், சென்ற சில ஏழு அல்லது எட்டு வருஷங்களிலேயே அதை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டு வந்திருக்கமுடியும். பொதுஜன அபிப்ராயம் வலுப்படாததற்குக் காரணம் சரியான கொள்கையை தெளிவாகத் தெரிந்து கொள்ளாததுதான். 1931-ம் வருஷத்திலிருந்து, சைனாவை ஜப்பான் படையெடுத்த காலத்திலிருந்து, ஐரோப்பாவில் எல்லோரும் குழப்பமடைந்தார்கள். பலத்தை இழந்தார்கள். ஏனென்றால் மிருகபலத்தை ஒடுக்குவதற்கும், சச்சரவுகளின் காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அறியாததால் அவர்கள் தோல்வியுற்றார்கள். ஜெர்மனி, இதாலி, ஜப்பான்—இந்த தேசங்களிடமிருந்து பலாத்காரம் கிளம்பியபோதிலும் அதை அடக்குவோம் என்று சொல்வதற்குப்பதிலாக, "சண்டையின் நியாயா நியாயங்கள் எப்படி இருந்தபோதிலும் பலாத்காரம் வேரூன்றி அதனால் இருகட்சிக்காரர்களும் ஜட்ஜுக்களாவதை அனுமதிக்கமாட்டோம்" என்று சொல்வதற்குப் பதிலாக, சச்சரவுகளின் காரணத்தை ஆராயப் புகுந்தார்கள். இப்படியாக 1931-ம் வருஷத்தில் ஜப்பான் பக்கம் வாதம்செய்ய ஆரம்பித்து சைனா கோபமூட்டத் தக்கவழியில் நடந்து கொண்டதாகச் சொன்னார்கள். இதாலிய—அபிஸீனிய யுத்தத்தின் போது அபீஸினியர் காட்டு மிராண்டிகள்தானே என்றார்கள். ஸ்பெயினைப்பற்றிப் பேசுகையில் சர்க்கார் ரொம்பக் கொடுமையாக இருப்பதாகக் கூறினார்கள். இவைகளெல்லாம் ஐரோப்பிய நாகரீகம் என்ற பிரச்னையைப் பார்க்கும்போது அர்த்தமற்றவை என்று தெரியவரும். முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரு பலமான தேசம் பலமற்ற மற்றொரு தேசத்தைத் தாக்குவதை சகல தேசங்களும் ஒன்று சேர்ந்து தடுக்கவேண்டும் என்பதுதான். கீழ் நாட்டு பிரச்னைகளிலிருந்து ஐரோப்பாவைப் பிரிக்க முடியாது. 1931-ம் வருஷத்தில் பிரிட்டன் சைனாவுக்குப் பண உதவி செய்திருந்தால் சைனா அமெரிக்காவின் உதவியையும் பெற்றிருக்கும். வல்லரசுகள் இந்த விதமாக பிரிந்து போயிருக்கும். ஒரு பக்கம் ஜப்பானும் மற்றொரு பக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, சைனா, ரஷ்யா இவைகளுமாக. இவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து பலாத்காரத்தை அடக்கத் தயார் அல்லது பொருளாதார, ராஜீய உதவி செய்யத்தயார் என்று தெளிவு படுத்தப்பட்டிருந்தால், சட்டம் மீறப்பட்டிருக்கும் என்பது சந்தேகமான விஷயமாயிருக்கும். சட்டம் வெற்றியடைந்திருந்தால் அபிஸீனியா, ஸ்பெயின் விஷயங்களில் சட்டத்திற்கு ஹானி வந்திராது.

ஆனால் பிரிட்டன் சட்டத்திற்கு தலைவணங்குவதற்குப் பதிலாக ஜப்பானை ஆதரித்தது. பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஜப்பானுக்குப் பரிந்துபேசின. இந்த அபிப்ராயததை பிரிட்டிஷார் எடுத்துக்கொண்டார்கள்.

ஆயுத முஸ்தீப்பில் ஈடுபட்டுள்ள தேசங்களைப் பார்க்கும்போது, ஆயுத பலத்தை அவர்கள் விட்டுவிடப் போவதில்லை என்பது தெளிவாகிறது. அப்படி அந்த ஆயுதங்களை உபயோகித்துதான் தன்னைக்காத்துக்கொள்ள வேண்டும், சட்டத்தைக் காக்க பலாத்காரம் வேண்டும் என்றிருந்தால், பலாத்காரத்தைத் தடுக்க உள்ள சட்டம் அல்லது நாகரீகம் அழிந்துதான் போகும். நாம் மறுபடியும் பழைய இருளடைந்த காலத்திற்குப் போக வேண்டியதுதான். ஏனென்றால் மிருகங்களைப் போல் மிருக பலத்தைக் கொண்டு நம்மைக் காத்துக்கொள்ள முயலுகிறோம். ஏனென்றால் நம்முடைய சுபாவம் மேலான அறிவை கொன்றுவிட்டது. —ஸர் நார்மன் ஏஞ்சல்.

## முதலாளித்துவமும் பலாத்காரமும்

தற்போதுள்ள சமூகத்தில் தனிப்பட்டவர் கையில் தொழில்களை விட்டுவிட்டால், சாமான்களில் உற்பத்தி விலையை கூடுமான வரையில் குறைக்கவேண்டும். முதலாளிகள் எந்தச் செலவை குறைக்க முயல்கிறார்களென்றால் தொழிலாளிகளின் சம்பளத்தை. தொழில் சண்டைகளுக்கும் பலாத்காரங்களுக்கும் இதுதான் காரணம். மேலும், இது வாங்கும் சக்தியைக் குறைப்பதாக இருக்கிறது. 'தேவை' என்பது ஜனங்களின் வாங்கும் சக்தியுடன் சம்பந்தப்பட்டிருப்பதால், தொழிலாளியின் வரும்படியைக் குறைக்கும் எந்த ஏற்பாடும் அளவுக்கு மிஞ்சிய உற்பத்தியையும் அதனால் பொருளாதார, நெருக்கடியையும் உண்டாக்குகிறது. மறுபடியும் பொருளாதாரம் சரியாக வேண்டுமானால், முதலாளி தன் தேசத்தின் பலாத்காரத்தால் அடிமைப் படுத்தப்பட்ட நாட்டுச் சந்தைகளில் சாமானை விற்று சமாளித்துக் கொள்ளவேண்டும்.

—ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா.

## சத்தியாக்கிரஹத்தின் தத்துவம்

நமது ஹிந்து தர்மத்தில் அஹிம்ஸை, தியாகம், சட்டம் ஒழுங்கு இவையெல்லாம் தனித்தனியாக, ஜோடி ஜோடியாக வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாம் சேர்ந்து ஒன்றாக வற்புறுத்தப்பட்டதில்லை. 'யுத்தம் வேண்டாம்' என்ற அசோகரின் மஹத்தான சமிக்ஞை அஹிம்ஸையின் மலர்ச்சியைக் குறிக்கிறது. அவதாரங்கள் தியாகத்தின் அவசியத்தையும் மேன்மையையும் நமக்குப் போதிக்கின்றன. பாண்டவர்கள் யுத்தகளத்தில் தர்மத்தைக் கடைப்பிடித்து நின்றார்கள்.

ஹிந்து தர்மம் தனது வேறுபாடுகளைப் போக்குவதற்கு முன்பாகவே ஆயிர வருஷ காலம் கிரஹணம் பிடித்தது போலாயிற்று. ஆனால் இந்தக் காலத்தில் நம் கண்முன் ஹிந்து தர்மத்தின் எல்லாக் கொள்கைகளும் ஒன்றுசேர்ந்த புத்துயிர்பெற்ற வீர வாழ்வு கொண்ட ஹிந்து தர்மத்தை காணும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். சுருங்கக் கூறுமிடத்து சத்தியாக்கிரஹம் என்ற ஓர் கொள்கையில் அஹிம்ஸை, தியாகம், தர்மம் மூன்றையும் ஒன்று சேர்த்தற்கு காந்திஜி பொறுப்பாளி. இதுதான் அவர் செய்த மஹத்தான காரியம்.

ஆனால் தற்காலத்தில் சத்தியாகிரஹத்தின் விரோதிகள் அதன் மாறுபாடுகள் அல்ல. அதன் அசாத்தியத்தினாலும் அல்ல. ஆனால் தனிப்பட்ட நபர்களும் கட்சிகளும் சத்தியாக்கிரஹ தர்மத்தை கேலிக்கிடமான வகையில் கொடுமையான முறையில் கைக்கொள்கிறார்கள். இவர்கள்தான் சத்தியாக்கிரஹ தர்மத்திற்கு விரோதிகள். அதன் விரோதிகளால் அபாயமில்லை. அதன் நண்பர்கள்போல நடிப்பவர்களால்தான் அபாயம்.

—ஆசிரியர் பி. மஹாதேவன்

## சூத்திரதாரி யார்?

இன்று உலகத்திலே மிகப்பெரிய செல்வாக்குடையவராக அதை ஆட்டிவைக்கும் சக்தி பெற்றவர் யார் என்று கேட்டால் ஜனங்கள், ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் என்று யாரையாவது பெரிய பெயரைச் சொல்லலாம். ஆனால் இன்று உலகத்திலேயே மிகப் பெரிய மனிதர் வேறொருவர் இருக்கிறார். அவர் பெயரை யாரும் கேட்டிருக்கமாட்டார்கள். அவர் பெயர் ஸர் ஹென்ரி டெடர்டிங். அவர்தான் ஹிட்லருக்கு பணஉதவி செய்பவர்; பிராங்கோவிற்கு உதவி செய்பவர். அவர்தான் திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு சூத்திரதாரியாக வேலை செய்கிறார். உலகத்து விவகாரங்களைத் தீர்த்து வைக்கிறார். ராக்பெல்லரை 'எண்ணெய் சிம்மாசனத்திலிருந்து' கீழே தள்ளினவர் இவர்தான். இவருக்கு பிரிட்டிஷ் கடற்படை பக்கபலம். இவருக்குப் பிரத்தியேகமாக ஒரு தனி ரகசிய இலாகா இருக்கிறது. இவர் ஒரு வார்த்தை சொன்னால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிர் அதில் இருக்கிறது. நம்பமுடியவில்லை. ஆனால் இது உண்மை. அவர் ஒரு ஹாலந்து தேசத்தார். தன் பெயர் வெளியாவதை அவர் வெறுக்கிறாராம்! அவரைப் பற்றி இப்பொழுது ஒரு புத்தகம் வெளிவந்துவிட்டது.

## 'ரிட்ஸ்' அற்புதம்

'ரிட்ஸ்' என்று பாரிஸ் நகரில் பிரசித்தி பெற்ற ஹோட்டல் ஒன்றுஇருக்கிறது. நவீன வசதிகளுக்கும், 'பெரிய மனிதர்கள்' தங்குவதற்கும் அது பெயர் போனது.

ரிட்ஸ் என்பவர்தான் அதை ஆரம்பித்தது. 1867-ம் வருஷத்தில் அவர் ஒரு பெரிய பாரிஸ் ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்தார். இன்று அவர் ஆரம்பித்த ஹோட்டலிற்கு உலகம் முழுவதும் பல கிளைகள் இருக்கின்றன. உலகத்திலேயே மிகப் பெரிய "வாடகை—மாளிகை"களில் அது ஒன்று. நாகரிக நடையுடை பாவனைகள் அங்குதான் நிர்ணயம் ஆகின்றன. ராஜாக்கள்,

பிரபுக்கள், பிரக்யாதிபெற்றவர்கள் சம்பந்தமாக பல விசேஷ சம்பவங்கள் இங்கே நடந்திருக்கின்றன. ரிட்ஸைப்போல ரிட்ஸின் மனைவியும் மிகவும் எழ்மையான நிலையில்தான் இருந்தார். அவள் தன்னுடைய கணவனைப் பற்றி "ரிட்ஸ்—உலகத்திற்கு ஹோட்டல் வைத்தவர்" என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.

## அதிசயப் பையன்

மைசூர் பிராந்தியத்து முஸ்லீம் சிறுவன் 'ஸாபு'வின் சரிதை மிகவும் அதிசயமானது. லாயத்திலிருந்து திடீரென்று சினிமா நட்சத்திரமாக மாறி உலகத்தின் முன்னணியில் ஸ்தானம்பெற்று விட்டான். மூன்று வருஷங்களுக்குமுன் இந்தப் பையன் மைசூரில் எங்கோ சாப்பாட்டுக்குத் திண்டாடிக்கொண்டிருந்தான். இன்று உலக முழுதும் அவன் பெயர் தெரியும். மைசூரில் யானைக்காடுகளில் திரிந்துகொண்டு தினம் பிடி சோறுக்கு வழியில்லாமல் இருந்தான்; இன்று அவன் இஷ்டப்பட்டால் உலகத்தில் என்ன தேவையானாலும் அவனுக்குக் கிடைக்கும். இங்கிலாந்தில் அவன் பெயரை அறியாதவர்கள் இல்லை. சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தபொழுது தலைவர் ரூஸ்வெல்டின் விருந்தினனாக இருந்தான். ஹிட்லர் முஸோலினி முதலியவர்களுக்குக்கூட கீர்த்தி இப்படி திடீரென்று வரவில்லை. ஒரு லண்டன் சினிமாக் கம்பெனி மைசூர் காடுகளில் வந்து படம் எடுக்கும்பொழுது இவனைக் கண்டு பிடித்து எடுத்தார்கள். இன்று சீமையில் ஒரு முக்கியமான சினிமா நட்சத்திரமாக வசிக்கிறான்.

## வெங்காயத்தின் மகத்துவம்

வெங்காயத்தில் 168 வகைகள் இருக்கின்றனவாம்.

வெங்காயம் மருந்தாக மிகப்பழைய காலந்தொட்டு உபயோகப்பட்டு வந்திருக்கிறது.

கட்டிகள் புண்கள் உடைப்பதற்காக வெங்காயத்தை அரைத்துப் போடும் வழக்கம் இருந்திருக்கிறது.

வரட்சியைத் தீர்ப்பதற்காக எகிப்தியர்கள் வெங்காயத்தை உபயோகித்தார்களாம்.

வெங்காயத்தை நறுக்கி வைத்திருந்தால் இந்த இடத்தை விஷஜந்துக்கள் அண்டாதாம். பாம்பு தேள்களுக்கு வெங்காயத்தின் வாசனையைத் தாங்க முடியாதாம்.

தேள் கடிக்குக் கூட வெங்காயத்தை நறுக்கி வைத்தால் குணமாகும். வெங்காயத்தின் சாற்றைப் பிழிந்து மூக்கில் காட்டினால் மயக்கம் முதலியன தீரும். கிருமிகளைக் கொன்று சுற்றியிருக்கும் காற்றை சுத்தப்படுத்தி தொத்து நோய் பரவுவதைத் தடுக்கிறது. அரபிய மாதர்கள் வெங்காயத்தை அதிகமாக உட்கொள்வதால்தான் அவர்கள் தேகம் பளபளப்பாகவும் மிருதுவாகவும் சிகப்பாகவும் இருக்கிறதாம்!

நமது நாட்டில் வெங்காயம் மருந்தாக உபயோகப்படுகிறது; உஷ்ண வியாதிகளுக்கு முக்கியமாக உபயோகம்.

---

(524-ம் பக்கத்தொடர்ச்சி)

நீ விசனப்படாதே. இனி உன்னைப் பற்றி அவர்கள் பேசமாட்டார்கள்" என்று தைரியம் சொல்லி பிரும்மா மறைந்தார்.

வெகு சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டு வரம்பெற்ற மரங்கள் தோப்புக்கு வந்தன. என்ன அதிசயம்! கர்வப்பட்ட மரங்கள் எல்லாம் மொட்டையாகக் காணப்பட்டன. கீழே பார்த்தால், உதிர்ந்த இலைகள்பாய்போல் பரவி இருந்தன. இது பிரும்மாவின் சாபத்தினால்தான் என்று எல்லா மரங்களும் தெரிந்துக் கொண்டன. பிறகு எல்லாம் ஏற்றத் தாழ்வில்லாமல் ஒத்துவாழ்ந்தன.

இந்த இலை உதிரும் காலத்துக்குத் தான் பெரியோர்கள் "இலையுதிர்காலம்" என்று பெயரிட்டார்கள்.